விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 10 ஞாயிற்றுக்கிழமை (26.08.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 251

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சர்வதேச உறவுகளைப் பேண ஜப்பான் தொடர்ந்து உதவும்

## ஊடகவியலாளர் சந்திப்பில் அகாஷி தெரிவிப்பு

(கொழும்பு), இலங்கை மற்றும் சர்வதேச சமூகம் ஆகியவற்றுக்கு இடையில் சிறந்த உறவுகளைப் பேண ஜப்பான தொடர்ந்து உதவும் என இலங்கைக்கான ஜப்பான் விசேட பிரதிநிதி யூசுசி அகாஷி தெரிவித்தார். அத்துடன் இலங்கையில் சிறந்த நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஜப்பான் தொடர்ந்து செயற்படும் என அவர் குறிப்பிட்டார்.



உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டு 22ஆவது தடவையாக இலங்கை வந்துள்ள யசூசி அகாஷி -ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான ஜி.எல். பீரிஸ், பசில் ராஜபக்ஷ, ரவூப் ஹக்கீம், மகிந்த (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி–அகாஷி நேற்று சந்திப்பு

ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷிக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்றுக் காலை விசேட சந்திப்பொன்று அலரிமாளிகையில் இடம் பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அபிவிருத்தி திட்டங்கள் குறித்து கலந்தரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (20ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளை வான் கடத்தல் விசாரணைக்கு உத்தரவு

வெள்ளைவான் கடத்தல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

வெள்ளைவான் கடத்தல்கள் மற்றும் காணாமல்போதல் சம்பவங்கள் தொடர்பிலான முறைப்பாடுகளை விசாரிக்க பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

சம்பவங்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## 'ஜெ' யின் எதிர்ப்பை டில்லி பரிசீலிக்கும்



(புதுடில்லி)

இலங்கைப் படையினருக்கு உதகையில் பயிற்சி அளிக்கப்படுவதற்கு முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்துள்ள எதிர்ப்பைப் பரிசீலிப்போம் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

வெலிங்டன் இராணுவ பயிற்சி மையத்தில் இலங்கை இராணுவ அதிகாரிகள் இரண்டு பேருக்கு பயிற்சி அளிக்கப்படுவது பற்றி தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்று கடும் எதிர்ப்புத் தெரிவித்து மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருந்தார்.

டில்லியில் இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் ரஞ்சன் (20ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை மீது தாக்குதல் நடத்த தயாராக இந்திய ஏவுகணைகள்?

## கொழும்பு ஊடகங்கள் தெரிவிப்பு; இந்தியா மறுப்பு

(கொழும்பு)

இலங்கை மீது தாக்குதல் நடத்த இந்தியா ஏவுகணைகளை தயார் நிலையில் வைத்துள்ளதாக, இலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதற்கு இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இலங்கை இராணுவத்தினருக்கு தமிழகத்தில் பயிற்சி அளிப்பதை நிறுத்த வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா, பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதம் எழுதியுள்ளார்.

இந்த நிலையில் இலங்கையின் மீது தாக்குதல் நடத்த இந்திய இராணுவம் முயன்று வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இது குறித்து சிங்கள செய்தி ஊடகமான சிங்கள நியூஸ் ஏஜென்சி, கொழும்பு பேஜ் உள்ளிட்ட சில ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில்,

அக்னி ரகத்தைச் சேர்ந்த நீண்ட தூர ஏவுகணைகளை இலங்கையின் முக்கிய பகுதிகளை குறிவைத்து இந்தியா நிறுத்தியுள்ளது.

கொழும்பு மற்றும் இராணுவத் தலைமையகம், அம்பாந்தோட்டை துறைமுகங்கள், கட்டுநாயக்க, இரத்மலானை மற்றும் மத்தல விமான நிலையங்கள், புத்தளம் அனல் மின் நிலையம், கரவலப்பிட்டிய மற்றும் களனி திஸ்ஸ மின் நிலையங்கள் உள்ளிட்ட பல முக்கிய பகுதிகளை இலக்காக வைத்து இந்திய ஏவுகணைகள் நிறுத்தப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப் பரிசில் பரீட்சை இன்று

2012-ம் ஆண்டுக்கான ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை இன்று நடைபெறவுள்ளது.

இதற்கான சகல ஒழுங்குகளும் பூர்த்தியடைந்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் பரீட்சைக்கு 3 இலட்சத்து 18 ஆயிரத்து 418 பேர் (02ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை நோக்கி வந்த பஸ் புத்தளத்தில் விபத்து ஒருவர் பலி

கொழும்பில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்து கொண்டிருந்த பருத்தித்துறை சாலையைச் சேர்ந்த பேருந்து ஒன்று விபத்தில் சிக்கியதில் ஒருவர் பலியாகியுள்ளதுடன் 18 பேர் காயமடைந்துள்னர்.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் புத்தளத்தில் இடம்பெற்றுள்ளது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறிப்பிட்ட பேருந்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9 மணிக்கு கொழும்பில் இருந்து புறப்பட்டது. குறித்த பேருந்து புத்தளம் பிரதான வீதியில் முன்சென்ற வாகனத்தை விலத்திச் செல்ல (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம்?

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான பிரேரணை ஒன்று முன்வைக்கப்படவுள்ளது.

ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவில் அங்கம் வகித்த தென்னாபிரிக்காவின் மனித உரிமை சட்டத்தரணி ஜஸ்மின் சூக்காவே, இந்தப் பிரேரணையை மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கவுள்ளார்.

இதனையடுத்து இலங்கையின் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பான ஆவணங்கள் மேலதிக தகவல்களை ஜஸ்மின் சூக்கா அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை முதல் சேகரித்து வருவதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மனித உரிமைச் சட்டங்கள் மீறப்பட்டமை மற்றும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பில் தமக்கு ஆலோசனை வழங்கும் வகையில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவின் அங்கத்தவர்களில் ஜஸ்மின் சூக்கா ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இவ் அமர்வில் கலந்து கொள்ளுமாறு இதுவரை இலங்கைக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. (எ-1)

**வாழ்த்துகிறோம்**

**5 ஆம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சைக்கு இன்று தோற்றும் மாணவர்கள் அனைவரும் சித்தியடைய வாழ்த்துகிறோம்.**

கல்விப் பகுதி,
வலம்புரி.

யாழ் நகரில் A/L பரீட்சைக்கு பின்னர்..
ACCA + UK Degree
Association of Chartered Certified Accountants-UK
BSc(Hons) in Applied Accounting (Oxford Brookes University) UK
@ K-AIMS
We Make You Progress Everyday..
077 2 555 814
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
No. 35-1/1, Upatissa Road, Colombo-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தந்தை செல்வா அகம் திறப்பு விழா

தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதிய பணிமனை திறப்பு விழாவும் அமிர்தலிங்கத்தின் பிறந்தநாள் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் தியாகி அ.அமிர்தலிங்கத்தின் 86ஆவது பிறந்தநாள் ஞாபகமாக கே.கே.எஸ்.வீதி நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள செல்வா அகம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதிய பணிமனையாக திறந்து வைக்கப்படவுள்ளது.

மேற்படி பணிமனை த.வி.கூ. செயலதிபர் வீ.ஆனந்தசங்கரியால் காலை 10 மணிக்கு சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து அமிர் ஞாபகார்த்த நிகழ்வு இடம்பெறும். (எ)

## புலமைப் பரிசில்...

தோற்றவுள்ளனர். நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்ட 2 ஆயிரத்து 803 நிலையங்களில் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 9 ஆயிரத்து 219 மாணவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 307, முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 720 , வவுனியா மாவட்டத்தில் 2 ஆயிரத்து 963 , மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 896 மாணவர்களுமாக வடக்கில் மொத்தம் 200 பரீட்சை நிலையங்களில் 18 ஆயிரத்து 105 பேர் தோற்றவுள்ளனர். (எ-11)


**வீடு விற்பனைக்கு**

ஏழாலை மேற்கில் உதயசூரியன் சனசமூக நிலையத்தில் இருந்து 100 யார் தொலைவில் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779493731
078 7801648

தொடர்பு நேரம்: காலை 9மணி தொடக்கம் மாலை 4 மணி வரை.(267)

**காணி விற்பனைக்கு**

பொன்னிப்புலம், அளவெட்டி வடக்கில் தோட்டக்காணி 15 பரப்பு கிணற்றுடன் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0750414028

(சி-837)



**தனுஸ் வேக்ஸ்சொப் அன் சேவிஸ் சென்ரர்**

மோட்டார் சைக்கிள் திருத்தம், வயறிங், பெயின்றிங் வேலைகளும் ஆட்டோ, மோட்டார் சைக்கிள் சேவிசும் (29)

95, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தொ.பேசி.இல.: 021 4914625, 077 4191251, 077 2090482, 077 7293312

உரிமையாளர்: உதயகுமார் திலீபன் (அண்ணாமலை)

ஞாயிற்றுக்கிழமையும் திறக்கப்படும்

**'EASY ENGLISH'**

ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம் (227)

புதிய வகுப்பு : 31.08.2012 / Phone : 773 212

**வலம்புரி** ஊடக அனுசரணையில் **கிருபா லேணர்ஸ்** வழங்கும்

யாழ்ப்பாணம் - 021 2224353, சாவகச்சேரி, நெல்லியடி, சுன்னாகம், கிளிநொச்சி, விசுவமடு.



VIJAY TV ஜூனியர் சீனியர் சுப்பர்சிங்கர் வெற்றியாளர்களான

ஸ்ரீகாந் மற்றும் மாளவிக்காவுடன்

மற்றும் பல முன்னணிக் கலைஞர்கள் கலந்து சிறப்பிக்கும்

யூனியர் சீனியர் இசை நிகழ்ச்சி

இன்று மாலை 3.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்



VIP ரிக்கட்டுக்களைக் கொள்வனவுசெய்யும் ரசிகர்களுக்கு இசை நிகழ்ச்சி முடிந்தவுடன் ரில்கோ ஹோட்டலில் மாளவிக்கா, ஸ்ரீகாந்துடன் புகைப்படம் எடுக்கும் சந்தர்ப்பம் இலவசமாக வழங்கப்படுவதோடு Tilko Hotel இனால் குறைந்த செலவில் வழங்கப்படும் இராப்போசன விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

ரிக்கெட்டுகளுக்கு : கிருபா லேணர்ஸ் 021 2224353 மற்றும் நிகழ்வன்று மண்டபவாயிலிலும்

நுழைவுச்சீட்டுக்கள் : 200/= 300/= 500/= VIP

OUR SPONSORS

RAMCO CEMENT ராம்கோ சீமெந்து

உதயா ஜுவல்லர்ஸ் கஸ்தூரியார் வீதி 021 222 4434

TILKO 021 222 5969

EUT தளபாடங்கள்

நல்லி சில்க்ஸ் 021 2225573
ராசி சில்க்ஸ் 021 2225571

FAMILY SUPER MARKET Jaffna Road, Manipay. Tel: 0773946487

மினி மோட்டோர்ஸ் யாழ்வீதி, மானிப்பாய் T.P : 021 2255312

Ranjanas CERAMIC

Event Management CAC Ceylon Art Creation


# கண்ணீர் அஞ்சலி

## கோண்டாவில் கிழக்கு "ராஜா பிளாசா" உரிமையாளர்
## இராசையா குவேந்திரநாதன் அவர்களின் அன்புத்தாயார்



### திருமதி. இராசையா சரஸ்வதி அவர்களின்

பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**விஸ்ரா விஷன் கலர் லாப்**

உரிமையாளரும் ஊழியர்களும்

52, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

347, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு தீப்பற்றியதில் 15 இலட்சம் நாசம்

(பூநகரி)

பூநகரி கெட்டியகுறிச்சிப் பகுதியில் உள்ள வீடு ஒன்று தீப்பற்றி எரிந்ததில் முற்றாக அழிவடைந்து 15 இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட சொத்துக்கள் அழிவடைந்ததாக பூநகரி பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

கொமாலை ஜெனி என்பவருடைய வீடே எரிந்துள்ளது. வீட்டில் இருந்த கடற்றொழில் உபகரணங்கள், வலைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள், நகைகள் உட்பட இரண்டரை இலட்சம் ரூபா பணமும் சூறையாடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆட்கள் எவரும் இல்லாத நிலையில் பூட்டியிருந்த இவ்வீடு எரிந்ததாக வீட்டு உரிமையாளரால் தெரிவிக்கப்படுகிறது. சம்பவ இடத்தை வந்து பார்வையிட்ட பொலிஸார் புலன் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

நிர்க்கதியாக இருந்த மேற்படி குடும்பத்திற்கு கெட்டியகுறிச்சி கமக்கார அமைப்பினர் 5 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளதாக பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார். (அ-2-84)

# ரசிகனின் மோ.சைக்கிள் ரகசியமாகப் பறந்தது

(கரவெட்டி)

வடமராட்சியில் மின்னொளியிலான உதைபந்தாட்ட போட்டியில் ரசிகராக கலந்து கொள்ளச் சென்ற இளைஞர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் ஒன்று இனந்தெரியாத கொள்ளையர்களினால் களவாடி கடத்திச் செல்லப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு மின்னொளியில் நடைபெற்ற உதை பந்தாட்ட அரையிறுதி போட்டிகளை இரசிப்பதற்குச் சென்ற வேளையே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பல்லாயிரக்கணக்கான உதைபந்தாட்ட ரசிகர்கள் கலந்துகொண்ட இப்போட்டியில் போட்டி ஏற்பாட்டாளர்களினால் மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டிருந்த போதும் குறித்த இளைஞன் மாலுசந்தி வீதியோரத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு சென்ற சமயமே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-24)

# முட்புதர்களுக்கு மத்தியில் உருத்திரபுரம் மயானம்

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(சிவநகர்)

உருத்திரபுரத்தில் உள்ள மயானம் பற்றைக்காடாகவுள்ளமையால் இறுதிக் கிரியைகள் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த மயானத்தை கிறிஸ்தவர்களும் இந்துக்களும் பயன்படுத்துகின்றனர். மேலும் இம் மயானத்திற்கு செல்லும் வாய்க்காலில் அமைந்துள்ள பாலம் புனரமைக்கப்படாமையினால் மாரிகாலத்தில் இவ்வீதி வழியாக செல்ல முடியாதுள்ளது. எனவே, கிராம அபிவிருத்தி சங்கங்களும் பொது அமைப்புக்களும் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-254)

# பூநகரி கமநல சேவை நிலைய தலைவர் தெரிவு

(பூநகரி)

பூநகரி கமநல சேவை நிலையத் தலைவர் தெரிவு எதிர்வரும் 28 ஆம் திகதி மு.ப.10 மணியளவில் கமநல சேவை நிலைய மண்ட'த்தில் நடைபெறவுள்ளது.

கடந்த இரு மாதங்களாக 19 கமக்கார அமைப்பிற்கான தேர்தல் நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து கமநல சேவை நிலையத் தலைவர் தெரிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-84)

# இராசி பலன்

26.08.2012
(ஆவணி 10, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
தசமி பின்னிரவு 2.53 மணிவரை
கேட்டை முற்பகல் 10.41 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை
குங்குலியக்கலயர் குருபூசை,
ஆவணி மூலம்.

**மேடம்**  கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், மற்றவர்களுக்காக பொறுப்புச் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது, விரயங்கள் கூடும், உடல் நலனில் கவனம் தேவை.

**இடபம்**  பெண்களால் பெருமை சேரும் நாள், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**  வீட்டுப் பிரச்சினைகள் தீரும், பழைய கடனில் ஒரு பகுதியை கொடுத்து மகிழும் வாய்ப்புண்டு, வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்**  தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வீர்கள், தொழில் மேன்மையுண்டு.

**சிங்கம்**  மறக்கமுடியாத சில சம்பவங்கள் இடம் பெறலாம், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், வாகன சுகமுண்டு.

**கன்னி**  இனிய அனுபவங்கள் ஏற்படலாம், வாக்கு மேன்மையுண்டு, உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும், முருகன் வழிபாடு முன்னேற்றம் தரும், உறவினர் உதவியுண்டு.

**துலாம்**  புத்திசாலித்தனமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், பொருளாதார நிலை உயரும், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**விருச்சிகம்**  சயன சுகமுண்டு, வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், கற்பனை மிகுதியான நாள், உறவினர் பகை அகலும், எண்ணங்கள் எளிதில் கைகூடும்.

**தனுசு**  எதிலும் கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனையை கேட்பீர்கள்.

**மகரம்**  முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உறவினர் வருகையுண்டு, புதிய தகவல்கள் வந்து சேரும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**கும்பம்**  தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், தூரதேசச் செய்திகளால் நன்மையுண்டு, மனதில் உற்சாகம் பிறக்கும், போசன சுகமுண்டு, எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரும்.

**மீனம்**  மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், தேகநலன் சீராகும், சொத்து தகராறுகள் சுமுகமாக முடியும்.

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## பூண்டு வாசனை

"கையிலே என்ன சேர்?"

"பை!"

"அது தெரியும். அந்தப் பையினுள் இருப்பது என்ன என்று கேட்கிறேன்" என்றார்.

"பூண்டு! வாங்கிக் கொண்டு போகிறேன்" என்று கூறினார்.

"எதற்கு பூண்டு...?"

"சாப்பிடத்தான்..." என்றார்.

"அந்த வாசனை உங்களுக்குப் பிடிக்குமா?"

"இதுவரைக்கும் அதன் வாசனை பிடிக்காமல்தான் இருந்தது. இனி மேல் பிடிக்கும்" என்றார்.

"ஏன்?" என்று கேட்டார்.

"இதிலே பல சௌகரியம் இருக்கிறது என்று ஏற்கனவே நமக்குத் தெரியும். இப்போது இன்னொரு சௌகரியம் இருப்பதாக பத்திரிகை வாயிலாக அறிந்து கொண்டேன்"

"என்ன விடயம்?" என்று கேட்டேன்.

"தொடர்ந்து பூண்டு சாப்பிட்டால், இரத்தத்திலே குளுக்கோஸ் அளவு குறைகிறது. அதாவது நீரிழிவைக் கட்டுப்படுத்தும் சக்தி (Anti diabetic effect) பூண்டுக்கு இருக்கிறது" என்று அதில் எழுதியிருந்தது.

"அப்படி?"

"ஆமாம்! பூண்டிலே ஒரு அமினோ அமிலம் இருக்கிறது. அதிலே கந்தகம் இருக்கிறது. இந்த வேதிப்பொருள் இன்சுலின் சுரப்பை அதிகப்படுத்துகிறதா...? அல்லது இரத்தத்திலே உள்ள சீனியை வெளிப்புறத்தசைகளுக்கு விரைவாக எடுத்துச் செல்ல உதவியாக இருக்கிறதா? என்பது பற்றி சரியாகத் தெரியவில்லை. இருந்தாலும் இவ்விரண்டிலும் ஏதோ ஒன்றைச் செய்கிறது"

"சபாஷ்! இனிமேல் நானும் பூண்டுக்கு மாற வேண்டியதுதான்"

"அப்படியென்றால்... நீங்கள் இதுவரைக்கும்..."

"நான் இதுவரையிலும் பழம் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்! An apple a day Keeps doctor away" -என்று சொல்வார்கள் என்றார்.

"அதைவிட பூண்டு மிகவும் வசதியானது சேர்!"

"எப்படி சொல்கிறீர்கள்? சற்று விளக்கமாக சொல்லுங்கள்"

"தினமும் ஓர் அப்பிள் பழம் சாப்பிட்டால், வைத்தியர் நம்மிடம் வரமாட்டார்; தினமும் ஒரு பூண்டு சாப்பிட்டால்... யாருமே நமது அருகில் வரமாட்டார்கள்... A garlic a day keeps every body a way"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 90 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 90 |
| தக்காளி | 50 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 60 | 60 | 80 |
| கரட் | 100 | 100 | 150 |
| பூசணி | 30 | 30 | 50 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 70 | 90 | 70 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 70 |
| பாகற்காய் | 80 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 80 | -- | -- |
| பயற்றங்காய் | 60 | 90 | 40 |
| லீக்ஸ் | 110 | 100 | 120 |
| பீற்றூட் | 40 | 50 | 60 |
| கறிமிளகாய் | 70 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 90 | 100 | 70 |
| போஞ்சி | 100 | 110 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 15 |
| தேசிக்காய் | 140 | 60 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 25 | 20-25 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(சி/831)

# மரண அறிவித்தல்

## திருமதி இராசையா சரஸ்வதி



கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சரஸ்வதி நேற்று (25.08.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், நாகரத்தினம் (நாகராசா), குவேந்திரநாதன் (ராசா - ராஜா பிளாசா), தர்மபூபதி, குசலகுமாரி, வசந்தி (கனடா), காலஞ்சென்ற மங்கையற்கரசி மற்றும் பிறேமா, பத்மநாதன் (கனடா), சுபாசினி (கனடா), பாஸ்கரன் (கனடா), உதயதர்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், புனிதவதி, றஞ்சினிதேவி, கனகசிங்கம், கனகலிங்கம், சண்முகலிங்கம் (கனடா), தர்மகுலரட்ணம் (குலசேகரம்பிள்ளை & Sons ), கலாவதி (கனடா), தர்மலிங்கம் (கனடா), ஜனனி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், இரத்தினம்மா, காலஞ்சென்ற ஐயாத்துரை (பொன்னுத்துரை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கியெந்தி (முன்னாள் உதவி விரிவுரையாளர், விவசாய பீடம் - யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்), சுமன் (வைத்திய கலாநிதி, யாழ். போதனா வைத்தியசாலை), ஷியந்தினி (உத்தியோகத்தர், மக்கள் வங்கி, யாழ் பல்கலைக்கழகக் கிளை), ஜகுலன் (கனடா), விஜிதா (பிரான்ஸ்), கௌசிதா (கனடா), சுகிதா (லண்டன்), சுரேகா (யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை), அனுஷா (கனடா), சுரேன் (கனடா), கஜன் (கனடா), கஜனி (கனடா), சுமித்தா (பிரான்ஸ்), சுகாஷ் (கனடா), பிரதீபா (கனடா), பிரதீபன் (கனடா), பிரவீனா, சயானா (A/L 2013, கொக்குவில் இந்துக் கல்லூரி), சோபிகா (கனடா), யசீகன் (கனடா), சுகன்யா (கனடா), அம்சன் (கனடா), தனுஷன் (கனடா), ஜென்சன் (கனடா), கிசோத் (A/L 2012, யாழ். இந்துக் கல்லூரி), தஜீவனி (A/L 2013, யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.08.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஞானவைரவர் வீதி, மதவடி, பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

(290)

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# கண்ணீர் அஞ்சலி

குவேந்திரநாதன் (ராசா) (ராஜா பிளாசா,கோண்டாவில்)
அவர்களின் அன்புத்தாயார்

## ராசையா சரஸ்வதி

(ஞானவைரவர் வீதி, மதவடி, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு)



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உரிமையாளர், ஊழியர்கள்,
ஐங்கரன் களஞ்சியம்
திருநெல்வேலி.

(286)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி மகேஸ்வரி



கொட்டையந் தோட்டம் கரணவாய் மேற்கு, கரவெட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட சின்னத்தம்பி மகேஸ்வரி அவர்கள் 24.08.2012 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், தருமாம்பாள் (சுவிஸ்), விக்னேஸ்வரி, விக்கினேஸ்வரன் (சுவிஸ்), தனலட்சுமி (லண்டன்), கணேஸ்வரன் , பாஸ்கரி (லண்டன்), றைசினி ஆகியோரின் அன்புத் தாயாரும், த.சுபேந்திரன் (சுவிஸ்), செ.ஜெயக்குமார்(லண்டன்), க.சோமநாதன் (லண்டன்), து.இராசகுமார், வி.வசந்தகுமாரி, க.தர்மாம்பாள் ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிராமி (சுவிஸ்) அமுதசுரபி (சுவிஸ்), அசிதன் (சுவிஸ்), சுதாகரன் (சுவிஸ்), கிஷோர் (சுவிஸ்), வினுஷா(சுவிஸ்), விஷான்(சுவிஸ்), வினோதா (சுவிஸ்), கௌசிகன் (லண்டன்), கௌசிகா (லண்டன்), கௌதன் (லண்டன்), மதுஷாந், கானுஷா, சுரேஸ்மேனன், காண்டீபன், கபினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அபிவரிசி (சுவிஸ்), ஆருஜன்(சுவிஸ்), காயத்திரி(சுவிஸ்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27.08.2012 திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூவரசம் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்

கொட்டையந் தோட்டம்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.
தொ.பே:-0217912267

(சி-830)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருக பலியை தடுப்பதற்கு மேர்வின் சத்தியாக்கிரகம்

முன்னேஸ்வரம் காளி கோவிலில் மிருக பலியை தடுப்பதற்காக எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதி தான் சத்தியாக்கிரகம் மேற்கொள்ளப்போவதாக அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த வருடமும் மிருகபலியை தடுப்பதற்கு தான் தலையிட்டதாக தெரிவித்த அவர் இந்த வருடமும் மிருக பலி கொடுப்பதற்கு ஆலய மதகுருக்கள் திட்டமிட்டுள்ளதாக தனக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அம் மதகுருக்களுடன் பேசி மிருக பலியை தடுப்பதற்கு நான் முயன்றேன். ஆனால், அவர்களின் மதத்தின்படி இதற்கு அனுமதியுள்ளதாகவும் எப்படியேனும் இதை தாம் நடத்துவார்கள் எனவும் தெரிவித்தனர்.

மதகுருக்கள் அவ்வாறு பேசுவதற்கு உரிமையில்லை. கொலை களை இந்து சமயமோ பௌத்த சமயமோ அல் லது வேறு சமயமோ ஊக் குவிக்கவில்லை.

எனவே மிருக பலிக்கு எதிரான அனைவரையும் செட்டெம்பர் முதலாம் திகதி காலை சத்தியாக்கிரகத்தில் இணைந்து கொள்ளுமாறு அழைக்கின்றேன் என தெரிவித்தார்.

நான் இந்நாட்டில் வாழும்வரை அவர்களின் பிழையான நிகழ்ச்சி நிரல் படி செயற்பட அனுமதிக்கமாட்டேன் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# மின்சாரம் இன்மையால் 40 குடும்பங்கள் அவதி

## யோகபுரம் கிழக்கின் துயர்

(முல்லைத்தீவு)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவு யோகபுரம் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 120 குடும்பங்களில் 40 குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்கப்படாமையினால் அம் மக்கள் இருளிலே வாழ்ந்து வருகின்றனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் கடந்த 2009 ஆம் ஆண்டு முதன் முதல் மீள்குடியேற்றம் செய்யப்பட்டது. இங்கு 40 குடும்பங்களுக்கு இன்றுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. இதற்கான காரணம் எதுவும் தெரியவில்லை.

நவீன மயப்படுத்தப்பட்ட இக்கால சூழ்நிலையில் மின்சாரம் வழங்கப்படாமையினால் பாடசாலை மாணவர்கள் மற்றும் விவசாயிகள், கடை உரிமையாளர்கள் ஆகியோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக க.பொ.த. உயர்தர மாணவர்கள், புலமைப்பரிசில் மாணவர்கள் குப்பி விளக்கிலேயே கல்வி கற்று பரீட்சைக்கு தோற்ற வேண்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக உரிய தரப்பினரிடம் பலமுறை முறைப்பாடு செய்தும் எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு மின்சாரத்தை வழங்கி கிராமத்தை ஒளியூட்ட வேண்டுமென அப்பகுதி மக்கள் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-267)

# விமானியின் அறைக்குள் இருந்து பயணித்த பெண்கள்

(கொழும்பு)

ஶ்ரீலங்கன் எயார்லைன்ஸ் யுஎல் 172 விமானம் பயணிகளுடன் கொழும்பில் இருந்து நேற்று முன்தினம் பெங்களூர் விமான நிலையத்துக்கு சென்றது. இதன்போது குறித்த விமானத்தின் விமானி தமது இரண்டு பெண்களையும் விமானி அறைக்குள் அனுமதித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

விமான பறப்புகளின் போது கடைபிடிக்கப்படும் ஒழுங்குகளை மீறியதாக இலங்கையின் விமானி ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இப் பயணத்தின்போது பணிகள் தமது பாதுகாப்பு குறித்து அச்சமடைந்தனர்.

இவர்கள் விமானத்தில் 6 சி மற்றும் 9 ஈ ஆசனங்களில் பயணம் செய்தவர்களாவர்.

இந்த நிலையில் அவர்கள் இருவரும் விமானம் பெங்களூரில் தரையிறங்கும் வரையில் விமானியுடனேயே பயணம் செய்ததாக பெங்களூர் வாசி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் குறித்த பெண்கள் இருவரும் கைகளில் பியர் போத்தல்களை வைத்திருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தாம் இது தொடர்பில் ஆட்சேபனையை வெளிட்டபோது விமானி தமது மைத்துனர் என்று பெண்கள் இருவரும் தெரிவித்ததாக பெங்களூர் வாசி குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் இது தொடர்பில்விமானநிலைய அதிகாரிகளிடம் முறையிடப்பட்டுள்ளது. (அ-2)

**Europa Bildung's Forum**

**இந்து பௌத்த கலாசார பேரவை**

ஆகிய இவ்விரு நிறுவனங்களும் இணைந்து நடாத்தும் இலவச மொழியியல் கல்வி நிலையத்தில் இவ்வருடம் A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான சிங்கள, ஆங்கில வகுப்புக்கள்செப்டெம்பர் முதல் வாரத்தில் நடைபெற இருப்பதால் காலை, மாலை சனி, ஞாயிறு வகுப்புக்களில் சேர விரும்புவோர் தங்க ளுடைய விண்ணப்பங்களை செப்டெம்பர் 5 ஆம் திகதிக்கு முதல் கீழ்க் காணும் விலாசங்களில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

29,பழம்வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
T.P:-0217200157

A9 வீதி,
சாவகச்சேரி.
T.P:-0217200738

முக்கிய குறிப்பு:- நெல்லியடியில் செப்டெம்பர் மாதத்தில் புதிய வகுப்பு ஆரம்பிக்க இருப்பதால் வடமராட்சியில் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் விண்ணப்பம் கோரப்படுகின்றன. வடமராட்சியைச் சேர்ந்த மாணவர்கள் விண்ணப்பங்களை யாழ்.காரியாலயத்தில் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பங்களை தபால் மூலம் அனுப்பி வைக்கலாம்.

(சி/828)

# கப்பலின் எண்ணெய் கசிவால் பாதிப்பில்லை

## அனர்த்த முகாமைத்துவ நிலையம்

கப்பல் எண்ணெய்க் கசிவினால் பாதிப்பு கிடையாது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் சரத் குமார தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாணந்துறை பிரதேச கடற் பகுதியில் நங்கூரமிட்டிருந்த சைப்ரஸ் நாட்டுக்குச் சொந்தமான வர்த்தகக் கப்பலொன்று மூழ்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கப்பலிலிருந்து எண்ணெய் கசிவதாகவும் இதனால் பாதிப்புக்கள் ஏற்படக் கூடும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்த கப்பல் எண்ணெய் கசிவினால் தற்போதைக்கு எவ்வித பாதிப்பும் கிடையாது. இலங்கையின் தலைநகர் கொழும்பிலிருந்து சில கடல்மைல் தொலைவிலேயே கப்பல் மூழ்கி வருகிறது. ஆழ் கடலில் கப்பல் மூழ்கி வருவதனால் பாதிப்புக்கள் குறைவு.

1985 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கப்பல் கடந்த சில ஆண்டுகளாக இலங்கையின் பாணந்துறை கடற்பரப்பில் நங்கூரமிட்டிருந்தது.

சரக்கு கொடுக்கல், வாங்கல் பிரச்சினை காரணமாக கப்பலை பயணம் செய்ய அனுமதிக்க வேண்டாம் என நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

**அறிவித்தல்**

பானப்பாசகர்கள், பிரியர்கள் அமைதியாகவும் குளிரான, சூடான பானங்களை சுவையுடன் அருந்துவதற்கும், உள்நாட்டு, வெளிநாட்டு உணவு வகைகளை சுவைப்பதற்கும் இதோ, Lux pool & Hot Bar பிரத்தியேக மண்டபம், நீச்சல் தடாகமருகிலும், திறந்த வெளியிலும் அங்கத்தவர்களுக்கும், அற்றவர்களுக்கு நிபந்தனையின் கீழ் நியாயமான விலையில் பரிமாறக் காத்திருக்கிறோம்.

ACTIF

Actif Hotels & Tourism

★★★ Lux Etoiles

No. 34, Chetty Street Lane, Nallur, Jaffna
Tel : 021 222 3966 Fax :021 222 0606
www.luxetoiles.com

(281)

**கல்யாண மாலை**

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-உத்[illegible]டம் 4<br>உயரம்:-5'8"<br>கி.பா:-16.25<br>தொழில்:-அரச ஒப்பந்த அலுவலக ஊழியர்<br>B/334 | பிறப்பு:- 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- உத்தரட்டாதி 2<br>உயரம்: 5'7"<br>கி.பா:-82, 8 இல் செவ்<br>தொழில்:- AAT U.K (P.R)<br>G/360 |
| பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-மூலம் 3<br>உயரம்:-5'6"<br>கி.பா:-80, 1 இல் செவ்<br>தொழில்:-Bsc,Msc சிவில் இன்ஜினியர் சிங்கப்பூர்<br>B/341 | பிறப்பு:- 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- மிருகசீரிடம் 2<br>உயரம்: 5'2"<br>கி.பா:-22<br>தொழில்:-ரியூசன் ஆசிரியை<br>G/362 |
| பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-புநர்பூசம் 2<br>உயரம்:-5'8"<br>கி.பா:-37, 2 இல் செவ்<br>தொழில்:-English Dip Computer, சாரதி<br>B/344 | பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- கேட்டை 2<br>உயரம்: 5'1'<br>கி.பா:- 36.25, 12 இல் செவ்<br>தொழில்:- கணக்காளர், தனியார் நிறுவனம்.<br>G/364 |
| பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-உத்தரம் 4<br>உயரம்:-5'6"<br>கி.பா:-57.25, 1 இல் செவ்<br>தொழில்:- கணனி பிரயோக உதவியாளர்<br>B/356 | பிறப்பு:- 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- மகம் 2<br>உயரம்: 5'3"<br>கி.பா:-57.75,<br>தொழில்:-Bsc பட்டதாரி பயிலுநர்<br>G/366 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல.144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக அரசின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இலங்கை வீரர்களை திருப்பி அனுப்புங்கள்



## ஜெயலலிதா மீண்டும் மன்மோகனுக்கு கடிதம்

(சென்னை)

நீலகிரி இராணுவ பயிற்சி கல்லூரியில் இலங்கை வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதை நிறுத்த வேண்டும். அவர்களை உடனடியாக திருப்பி அனுப்ப வேண்டும் என்று ஜெயலலிதா மீண்டும் வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் மன்மோகன்சிங்குக்கு முதல் அமைச்சர் ஜெயலலிதா நேற்றைய தினம் கடிதம் ஒன்றை எழுதி அனுப்பியுள்ளார். அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு,

இலங்கை இராணுவ வீரர்களுக்கு தமிழ்நாட்டில் பயிற்சி அளிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து 16.07. 2012 அன்று தங்களுக்கு கடிதம் எழுதினேன்.

என்னுடைய கடுமையான எதிர்ப்பை தொடர்ந்து சென்னை தாம்பரம் விமானப்படை நிலையத்தில் தொழில்நுட்ப பயிற்சி பெற்ற இலங்கை விமானப்படை வீரர்கள் 9 பேர் அங்கிருந்து பெங்களூரில் உள்ள எலகங்கா விமானப்படை நிலையத்துக்கு மாற்றப்பட்டனர்.

அவர்களை சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்புவதை விடுத்து அவர்களுக்கு பெங்களூரில் பயிற்சி அளிக்க மேற்கொண்ட நடவடிக்கை சரியானது அல்ல.

எனவே, இந்தியாவில் எந்த பகுதியிலும் இலங்கையை சேர்ந்த ஆயுதப் படையினருக்கு பயிற்சி அளிக்கக்கூடாது என்று முந்தைய கடிதத்தில் வலியுறுத்தி இருந்தேன். இவ்வளவு எதிர்ப்புக்கு பின்னரும் இலங்கையை சேர்ந்த இராணுவ அதிகாரிகள் திசநாயகா மொஹட்டலாலகே வெங்க்ரா, ஹேவ வாஸம் கண்டாடகே ஆகியோர் நீலகிரி வெலிங்டன் இராணுவ பயிற்சி கல்லூரியில் 11 மாத பயிற்சி எடுக்க அனுமதிக்கப்பட்டனர்.

இந்த செயல் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கும் கொஞ்சம் கூட மதிப்பளிக்கப்படவில்லை என்பதையே காட்டுகின்றது. தமிழக அரசின் கருத்தை கேட்காமலேயே மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை அதிருப்தி அளிக்கிறது.

எனவே, வெலிங்டன் இராணுவ பயிற்சி கல்லூரியில் இலங்கை இராணுவ வீரர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று இராணுவ அதிகாரிகளுக்கு தாங்கள் உத்தரவிட வேண்டும். நடவடிக்கை இலங்கை இராணுவ வீரர்களை அவர்கள் நாட்டுக்கு திருப்பி அனுப்ப உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் இவ்வாறு கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)




## இராஜஸ்தானில் கனமழை; 33 பேர் பரிதாப மரணம்



இராஜஸ்தான் மாநிலத்தில் பெய்து வரும் கனமழைக்கு 33 பேர் பலியாகியுள்ளனர். வட மாநிலமான இராஜஸ்தானில் உள்ள சிகார், கரு, தோல்பூர், பாரத்பூர், கரோலி, தவுசா போன்ற மாவட்டங்களில் கனமழை பெய்து வருகின்றது. கன மழையின் தாக்கத்தால் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்தது. இதனால் மக்களின் அன்றாட வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் பாதிக்கப்பட்ட இடங்களில் இராணுவத்தினர் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையே இறந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு முதல்வர் அசோக் கெலாட் 1.50 இலட்சம் ரூபா நிவாரண உதவி வழங்க உத்தர விட்டுள்ளார். (அ-2)

## சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டவர்களை உடனடியாக விடுதலை செய்யுங்கள்

### வைகோ கோரிக்கை

(சென்னை)

ஈழத்து இளைஞன் செந்தூரன் பூவிருந்தவல்லி சிறப்பு முகாமில் கடந்த 6 ஆம் திகதி முதல் உணவை மறுத்து பட்டினிப் போராட்டம் நடத்தி வருகின்றார். கடந்த 20 ஆம் திகதி முதல் துளி தண்ணீரும் பருகா மல் தனது நியாய மான கோரிக்கை கள் நிறைவேற்றப்படாவிடில் உயி ரைத் துறப்பதே மேல் என்று அறப் போரை நடத்துகிறார்.



துளிநீரும் பருகாவிடின் ஐந்து நாட்களுக்குப் பின்னர் சிறு நீரகங்கள் பழுது அடைந்து உயிருக்கு எந்த நேரத்திலும் ஆபத்து ஏற்படலாம். உண்ணாவிரதம் தொடங்கி இன்றோடு இருபது நாட்கள் ஆகிவிட்டன. தண்ணீரை மறுத்து 6 நாட்கள் ஆகிவிட்டன. செந்தூரனின் போராட்டம் முற்றிலும் நியாயமானது ஆகும் என வைகோ தெரிவித்துள்ளார். அவர் இது தொடர்பாக அறிக்கையொன்றை வெளி யிட்டுள்ளார். அதில் கூறியிருப்பவை வருமாறு, இந்நிலையில் செந்தூரனைக் கண்டு உண்ணாவிரதத்தை நிறுத்தக் கோருவதற்காக இலங்கையில் இருந்து செந்தூரனின் தந்தையின் சகோதரி கமலாதேவி உள்ளிட்ட உறவினர்கள் சென்னை வந்தனர். கமலாதேவி மாரடைப்பு காரண மாக உயிரிழந்தார்.

செந்தூரனையும் சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களையும் உடனடியாக விடுதலை செய்து திறந்தவெளி முகாம்களுக்கு அனுப்ப வேண்டும். எந்த நேரத்திலும் செந்தூரன் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடும். அவர் உயிருக்கு ஊறு நேர்ந்தால் அதற்குத் தமிழக பொலிஸாரும் தமிழக அரசுமே பொறுப்பாளி ஆவார்கள்.

எனவே, கருணை மனதோடு செந்தூரனையும் ஈழத்தமிழர்களையும் திறந்த வெளி முகாம்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு தமிழக முதல் அமைச்சரே வேண்டிக் கேட்டுக் கொள்கி ன்றேன் என அவர் தனது அறிக் கையில் கூறியுள்ளார். (அ-2)

## பிருத்வி-2 சோதனை வெற்றியளித்தது

(பாலாச்சூர்)




அணு ஆயுதம் சுமந்து சென்று எதிரிகளின் இலக்கை தாக்கும் பிருத்வி-2 சோதனை நேற்று இந்தியா வெற்றிகரமாக முடித்தது.

ஒடிசா மாநிலம் பாலாச்சூர் கடற்கரை பகுதியில் இருந்து ஏவப்பட்ட இந்த சோதனையை அடுத்து பாதுகாப்பு படையினரிடம் ஒப்படைக்கப் படும். இந்தியா தரப்பில் அறிவியல் துறையில் தொடர் முன்னேற்றம் கண்டு வருகின்றது. உலக அளவில் உள்ள போட்டிக்கு தாங்களும் தயாராக இருக்கும் பொருட்டு நமது பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி துறையினர் பல்வேறு சக்தி கொண்ட போர் ஆயுதங்களை உருவாக்கி வருகின்றனர். இந்த ஏவுகணை தரையில் இருந்து தரையில் உள்ள இலக்கை கொண்டு தாக்கும். 500 கிலோ எடை அணு பொருட்களை சுமந்து செல்லும் 350 கி.மீற்றர் தொலைவில் உள்ள இலக்கை தாக்கும் சக்தி கொண்டது. (அ-2)

## மனோரமாவுக்கு மூச்சுத்திணறல்

மனோரமா மூச்சுத்திணறல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.மனோரமா ஏற்கவே உடல் நலக்குறைவால் அவதிப்பட்டார், சில மாதங்களுக்கு முன் ஹோட்டல் விடுதி அறையில் வழுக்கி விழுந்து காலில் முறிவு ஏற்பட்டது.

இருந்தும் சில வாரங்களுக்கு பின் மீண்டும் உடல்நிலை பாதித்தது. வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை அளித்தனர். செயற்கை சுவாசக் கருவிகள் பொருத்தி வைத்தியர்கள் சிகிச்சை அளித்தார்கள். ஒரு மாதம் வைத்தியசாலையில் இருந்தார். திடீரென நேற்றைய தினம் மனோரமாவுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. உடனடியாக அப்பலோ வைத்தியசாலையில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு டாக்டர் தலைமையிலான மருத்துவக் குழுவினர் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். (அ-2)

## மன்மோகன், கட்காரி வீடுகளின் முன் அன்னாஹசாரே குழுவினர் போராட்டம்

(புதுடில்லி)



நிலக்கரி சுரங்கங்கள் ஒதுக்கீடு முறைகேட்டை கண்டித்த மன்மோகன் சிங், கட்டாரி ஆகியோர் வீடுகள் முன்பு அன்னா ஹசாரே குழுவினர் இன்றையதினம் முற்றுகை போராட்டம் நடத்துகின்றனர்.

நிலக்கரி சுரங்கங்கள் ஒதுக்கீட்டில் அரசுக்கு 1.86 இலட்சம் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டு இருப்பதாக மத்திய கணக்கு தணிக்கை குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டு இருந்தது. இந்த விவகாரம் பாராளுமன்றத்தை முடக்கி போட்டுள்ளது. பிரதமர் மன்மோகன்சிங் பதவி விலக வேண்டும் என்று பாரதீய ஜனதா உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கி உள்ளன.

அதேசமயம் ஹசாரே குழுவினர் காங்கிரஸ் பாரதீய ஜனதா இரண்டு கட்சிகள் மீதும் குற்றம் சாட்டியுள்ளனர். இந்த விவகாரத்தை இரண்டு கட்சிகளும் மூடி மறைக்க பார்க்கின்றன என்று அவர்கள் தெரிவித்தனர். எனவே, இதை கண்டித்து டில்லியில் பிரதமர் மன்மோகன்சிங், பரதீய ஜனதா தேசிய தலைவர் நிதின் கட்காரி ஆகியோர் வீடுகள் முன்பு ஞாயிற்றுக்கிழமை முற்றுகைப் போராட்டம் நடத்தப்போவதாக ஹசாரே குழுவினர் அறிவித்தனர்.

இதையடுத்து மத்திய அரசு முன்னெச்சிரிக்கை நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது. மன்மோகன் சிங், நிதின் கட்காரி வீடுகளுக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மத்திய டில்லியில் உள்ள பெரும்பாலான மெட்ரோ ரயில் நிலையங்கள் இன்றையதினம் மூடப்படுகின்றன. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவதூறு செய்பவர்களை அனுதாபத்துடன் பார்க்கிறேன்

## நடவடிக்கை வேண்டாம் என்கிறார் மஹிந்த

(கொழும்பு)

தம் மீது அவதூறு செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்க வேண்டாம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அப்பாவி பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்களுக்கு அவதூறு செய்யும் சேறுபூசுபவர்களுக்கு எதிராக கூடுதல் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பொலிஸ்+மா அதிபருக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

தான் ஒரு முதிர்ச்சியுற்ற அரசியல்வாதி. தம்மீது அவதூறு செய்பவர்களை அனுதாபத்துடனேயே பார்க்கின்றேன் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பேச்சாளரும் சர்வதேச ஊடக ஆலோசகருமான பந்துல ஜயசேகர விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதிக்கு அவதூறு செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பிரதேச அரசியல்வாதிகள் சிலருக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவிருப்பதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துள்ளன.

இதனடிப்படையில் விசாரணைகளையும் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். இது விடயம் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ள ஜனாதிபதி இவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டாம் எனப் பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

தான் ஒரு முதிர்ச்சியுற்ற அரசியல்வாதி என்ற வகையில் அவதூறு செய்பவர்களை மிகவும் அனுதாபத்துடனேயே பார்க்கின்றேன் என்று தெரிவித்த ஜனாதிபதி அப்பாவிப் பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு எதிரான அவதூறுகள் மற்றும் சேறு பூசுதல்கள் தொடர்பாக கவனம் செலுத்தி விசாரணைகளை நடத்தி அவர்கள் தமது நடவடிக்கை களை ஒழுங்கான முறையில் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்குரிய சூழலை உருவாக்குமாறும் பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். (அ-2)

# அணுத்தொழில்நுட்ப மாநாடு கொழும்பில்

(கொழும்பு)

சர்வதேச தொழில்நுட்பம் தொடர்பான மாநாடொன்று கொழும்பு தலதாரி ஹோட்டலில் நாளை திங்கட்கிழமை இந்த மாநாடு ஆரம்பமாகவுள்ளது.

விவசாய நிலங்களின் வளத்தை மேம்படுத்துவதனை தொனிப் பொருளாக கொண்டு இம்முறை மாநாடு நடைபெறவுள்ளது.

சீனா, பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஸ், நியூசிலாந்து, வியட்நாம் உள்ளிட்ட 17 நாடுகளை சேர்ந்த நாடுகள் இந்த சர்வதேச மாநாட்டில் பங்கேற்கவுள்ளன.

உறுப்பு நாடுகளில் காணி வளங்களை முறையாக பயன்படுத்தாமை காரணமாக ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்படவுள்ளது. (அ-2)

# மொழிக்கொள்கையை அமுல்படுத்தாத அரச நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

அரசாங்கத்தின் மொழிக்கொள்கையினை அமுல்படுத்தாத அரச நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகியன அரச மொழிகளாக உள்ளன. பொதுமக்களுக்கு தேவையான கடமைகளை மேற்கொள்வதற்காக இரு மொழிகளையும் பயன்படுத்துமாறு நிறுவனங்களிடம் தெரிவித்தால் அதனை அவர்கள் கட்டாயம் மேற்கொள்ள வேண்டும்.

அறிவுறுத்தல்களை நிராகரிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். எனினும் தற்போதுள்ள சட்டத்திற்கிணங்க போதுமான நடவடிக்கையினை மேற்கொள்ள முடியாதுள்ளது.

இதற்கமைய அரச கரும மொழிகள் ஆணைக்குழு சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளோம். தற்போதுள்ள சட்டத்திற்கமைய அரச மொழிக் கொள்கையினை அமுல்படுத்தாத நிறுவனங்களுக்கு எதிராக போதுமான சட்டநடவடிக்கைகளை எடுக்க முடியாதுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இலக்கிய கலந்துரையாடல்

போறும் ஏற்பாட்டிலான இலக்கியக் கலந்துரையாடலும் சிறப்புப் பட்டிமன்றமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அல்வாய் வடமேற்கில் அமைந்துள்ள கலை அகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் வருகையாளராக கலாநிதி த.கலாமணி கலந்து கொள்வார். அத்துடன் *காலத்தால் அழியாதவை ஆற்றுகைக் கலைகளா? இலக்கியங்களா?* என்னும் தலைப்பிலான சிறப்புப் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு அவையினர் கேட்டுள்ளனர். (அ)

# 2012.08 26 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1768-கப்டன் ஜேம்ஸ் குக் தனது கடற் பயணத்தை இங்கிலாந்தில் இருந்து ஆரம்பித்தான்.

★1914- முதலாம் உலகப் போர்: ஜேர்மனியின் குடியேற்ற நாடான டோகோலாந்து பிரெஞ்சு மற்றும் பிரித்தானியர்களினால் முற்றுகைக்குள்ளானது.

★1914- முதலாம் உலகப் போர்: ஜேர்மனிப் படைகள் ரஷ்யாவை டனென்பேர்க் போரில் தோற்கடித்தன.

★1920- ஐக்கிய அமெரிக்காவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

★1942- உக்ரைனில் சோட்கிவ் என்ற இடத்தில் நாசி ஜேர்மனியர் காலை 2.30 மணிக்கு யூதர்களை அவர்களின் வீடுகளில் இருந்து வெளியகற்றி குழந்தைகள், நோயாளிகள் உட்பட 500 பேரைக் கொன்று குவித்தனர்.

★1957-கண்டம் விட்டுக் கண்டம் பாயும் நீண்டதூர ஏவுகணையைத் தாம் சில நாட்களுக்கு முன் பரிசோதித்ததாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது.

★1972-22 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் ஜேர்மனி மியூனிக்கில் ஆரம்பமானது.

★1978-முதலாவது அருளப்பர் சின்னர் பாப்பரசராக பதவியேற்றார்.

★1978-முதலாவது ஜேர்மனிய விண்வெளி வீரர் சோயூஸ் விண்கலத்தில் விண்ணுக்குப் பயணமானார்.

★1997-அல்ஜீரியாவில் 60 இற்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டனர்.

★2006- திருகோணமல்லை மூதூர் கிழக்கில் நடத்தப்பட்ட குண்டுவீச்சில் பொதுமக்கள் இருவர் பலியாகினர்.

### பிறப்புக்கள்

★1883-திரு.வி.கல்யாணசுந்தரனார், தமிழறிஞர் (இ.1953)

★1927-அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் (இ.1989)

★1934-ஏ.ஜே.கனகரட்னா, ஈழத்து இலக்கியவாதி (இ.2006)

★1956-மேனகா காந்தி, இந்திய அரசியல்வாதி



### *அன்னை தெரேசா*

அன்னை தெரேசா அல்பேனியா நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டவரும் இந்திய குடியுரிமை பெற்ற உரோமன் கத்தோலிக்க அருட்சகோதரியும் ஆவார். இவரின் இயற்பெயர் ஆக்னஸ் கோன்ஜா போஜாஜியூ ஆகும். 1950 ஆம் ஆண்டு இந்தியாவின் கொல்கத்தாவில் மிஷனரீஸ் ஆப் சேரிட்டி என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக அவர் ஏழை எளியோர்களுக்கும் நோய் வாய்ப்பட்டோருக்கும் அநாதைகளுக்கும் இறக்கும் தறுவாயிலிருப்போருக்கும் தொண்டாற்றிக் கொண்டே இருந்தார். முதலில் இந்தியா முழுவதும் பின்னர் ஏனைய வெளி நாடுகளுக்கு மிஷனரீஸ் ஆப் சேரிட்டியை விரிவாக்கினார்.

இவர் 1979 இல் அமைதிக்கான நோபல் பரிசினையும் 1980 இல் மனிதநேய பணிகளுக்காக இந்தியாவின் சிறந்த குடிமக்கள் விருதான பாரத ரத்னா விருதினையும் பெற்றார். மரணத்திற்குப் பின் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் ஆல் முக்திபேறு அடைந்தவராக அறிவிக்கப்பட்டு கொல்கத்தாவின் அருளாளர் தெரேசா என்று பட்டம் சூட்டப்பட்டார்.

ஆக்னஸ் கோன்ஜா போஜாஜியூ (கோன்ஜா என்பதற்கு அல்பேனிய மொழியில் ரோஜா அரும்பு என்று பொருள்). 1910 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 26 ஒட்டோமன் சாம்ராஜ்யத்தின் அஸ்கப் பிறந்தார். ஓகஸ்ட் 26 ஆம் திகதி பிறந்த போதிலும் அவர் திருமுழுக்குப் பெற்ற ஓகஸ்ட் 27 ஆம் திகதியை தனது உண்மைப் பிறந்த நாளாகக் கருதினார். அல்பேனியாவின் ஷ்கோடரில் வாழ்ந்து வந்த குடும்பமான நிக்கல் மற்றும் டிரானா போஜாக்சியுவின் குழந்தைகளில் இளையவர் இவர். அவரது தந்தை அல்பேனிய அரசியலில் ஈடுபட்டிருந்தார். 1919 ஆம் ஆண்டில் ஸ்கோப்ஜி அல்பேனியாவிற்கு வெளியே தள்ளப்பட்ட ஒரு அரசியல் கூட்டத்திற்குப் பின்னர் அவர் நோய்வாய்ப்பட்டு ஆக்னஸுக்கு எட்டு வயதாயிருக்கும் போது காலமானார். அவரது மரணத்திற்குப் பின் அவரது தாயார் அவரை உரோமன் கத்தோலிக்கராக வளர்த்து வந்தார். வாழ்க்கை வரலாற்றின் படி குழந்தைப் பருவத்தில் ஆக்னஸ் மதபோதகர்களாலும் அவர்களது தனது பன்னிரண்டு வயதுக்குள் தெய்வ நம்பிக்கையுள்ள ஒரு வாழ்க்கைக்கு தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார்.

தனது பதினெட்டாம் வயதில் அவர் வீட்டை விட்டு வெளியேறி லொரேட்டோ சகோதரிகளின் சபையில் மத பிரசாரகராக தன்னை இணைத்துக் கொண் டார். அதற்குப் பின்னர் தனது தாயையோ அல்லது உடன் பிறந்த சகோதரியையோ மீண்டும் பார்த்தாரிலர்.

கொல்கத்தாவில் 13 உறுப்பினர்களையே கொண்ட சிறியதொரு அமைப்பாக ஆரம்பிக்கப்பட்டது இது. இன்று 40 இலட்சத்திற்கு மேலான அருட்சகோதிரிகளால் நடத்தப்படும் அநாதை இல்லங்களையும் எய்ட்ஸ் நல்வாழ்வு மையங்களையும், தர்மஸ்தாபனங்களையும் தன்னகத்தே கொண்டு அகதிகள், குருடர், ஊனமுற்றோர், முதியோர், மது அடிமைகள், ஏழை எளியோர், வீடற்றோர், வெள்ளத்தினாலும் தொற்றுநோயாலும் பஞ்சத்தாலும் பாதிக்கப்பட்டவர்கள் போன்றவர்களுக்காக பரிதவிப்பதாய் இருக்கிறது.

1996 ஏப்ரல் மாதம் அன்னை தெரேசா கீழே விழுந்து அவரது காறை எலும்பு முறிந்தது. ஆகஸ்டில் மலேரியாவினாலும் இதய கீழறைக்கோளாற்றினாலும் அவதிப்பட்டார். இதய அறுவை சிகிச்சைக்குட்பட்ட போதிலும் அவரது உடல் நிலை மோசமடைந்தது.

இவர் 1997 ஆம் ஆண்டு செப்டெம்பர் 5 ஆம் திகதி மரணமடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வங்கியின் 73 ஆவது ஆண்டு நிறைவு விழா உரும்பிராய் கிளையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவி பொது முகாமையாளர் கே.ஈ.டி.சுமணசிறி கேக் வெட்டுவதையும் அருகில் இலங்கை வங்கி முகாமையாளர்களான சுன்னாகக் கிளை முகாமையாளர் பொன். பாலகுமார், உரும்பிராய் கிளை முகாமையாளர் எ.சந்தனு ஆகியோர் நிற்பதையும் விருந்தினர் ஒருவர் பாடசாலை மாணவனுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# உண்டியல் திருடன் அகப்பட்டான்

(முல்லைத்தீவு)

ஆலய உண்டியலை உடைத்து பணம் திருட முற்பட்ட திருடன் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டு முல்லைத்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள் ளிக்கிழமை இரவு 10 மணிக்கு முல்லைத் தீவு இ.போ.ச. சாலைக்கு அருகில் உள்ள புனித சூசையப்பர் ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, மேற்குறித்த ஆலயத்தில் உள்ள உண்டியலை உடைத்து திருடமுற்பட்ட வேளை முல்லைத்தீவு இ.போ.ச. சாலையில் மேக்கன்ரைல் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட திருடன் முல்லைத்தீவு பொலிஸா ரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ-3-267)

# மின் நிலையம் பழுதடைந்தமை தொடர்பில் விசாரணை வேண்டும்

## ஐ.தே.க.வலியுறுத்து

(கொழும்பு)

லக்விஜய மின் நிலையம் பழுதடைந்தமை தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல கோரிக்கை விடுத்துள்ளார்.

மஹாவலி திட்டத்தின் கீழ் நாட்டின் ஏழு பிரதான மின் நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டதாகவும் அவை இந்த அளவிற்கு பழுதடையவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

லக்விஜய மின் நிலையம் கடந்த ஆண்டில் மட்டும் 12 தடவைகள் பழுத்டைந்துள்ளன. மின் நிலையத்தை நிர்மாணித்தவர்களே இந்த நிலைமைக்கு பதிலளிக்க வேண்டும்.

இந்த மின் நிலையத்தின் ஊடாக இந்தியாவிற்குக் கூட மின்சாரத்தை விநியோகம் செய்ய முடியும் என அரசாங்கம் அறிவித்த போதிலும் பல தடவைகள் பழுதடைந்து மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளது.

எனவே லக்விஜய மின் நிலையம் பழுதடைந்தமை தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றார். (அ-2)

# ரத்வத்தேயின் 8 கோடி பணத்தை வங்கியிலிட நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தேயிடம் காணப்பட்ட சுமார் 8 கோடி ரூபா பணம் எவ்வாறு சம்பாதிக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்த தவறியதன் காரணமாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் தாக்கல் செய்த வழங்கில் வழக்கு பொருளாக இருந்த அந்தப் பணத்தை ஹற்றன் நஷனல் வங்கியில் வைப்பிலிடுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

இந்தப் பணம் அனுருத்த ரத்வத்தேயின் புதல்வர்களான லோஹன் ரத்வத்தே மற்றும் மகேந்திர ரத்வத்தே ஆகியோருக்கு சொந்தமானது எனவும் அதனை தமக்கு வழங்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்து கொண்ட போதே நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இந்த பணம் ஹற்றன் நஷனல் வங்கியின் பெட்டகம் ஒன்றில் இருந்து புலனாய்வு பிரிவினரால் கைப்பற்றப்பட்டது.

எவ்வாறாயினும் உயிரிழப்பதற்கு முன்னர் இந்த வழக்கில் சாட்சியமளித்த ரத்வத்தே இந்தப் பணம் தனக்குரியது அல்ல எனவும் அது தனது புதல்வர்களுக்கு சொந்தமானது எனவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் அருள்மிகு ஸ்ரீ செல்வநாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் ஆலய பரிபாலகர்களின் அனுசரணையுடன் ஐந்தாம் திருமுறை முற்றோதல் ஆரம்பமாகி தொடர்ந்து தினமும் காலைப் பூசையுடன் முற்றோதல் நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)


## குறைந்த கட்டணத்தில் பொதிகள் சேவைகள் (Parcel Service)

கனடா, லண்டன், சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே போன்ற நாடுகளுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் (சவுதி அரேபியா, குவைத், துபாய், டோகா கட்டார், பாகிறின்) குறைந்த கட்டணத்தில் சேவைகள்.

Canada - 1 கிலோ - 2600
London - 1 கிலோ - 1500
} மூன்று நாட்களில் ஒப்படைக்கப்படும்.

Canada - 1 கிலோ - 600
London - 1 கிலோ - 500
} ஏழு நாட்களில் ஒப்படைக்கப்படும்.

உங்கள் உணவு, உடை, அலங்காரப் பொருட்கள் CD, VIDEO, ALBUM - போன்ற பொருட்களை அனுப்பி வைக்கலாம்.

**Rainbow Travels**

கிழமையில் ஏழுநாட்களும் திறந்திருக்கும்

30/2, Third Lane,
Power House Road, Jaffna.
021 221 9596

(C-829)

## CANADAவில் குடும்பத்துடன் குடியேறுவதற்கான VISA ஒழுங்குகள்

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இளமாணி முதுமாணிப் பட்டம் பெற்றவர்கள் குறுகிய காலத்தில் Canada செல்வதற்கு ஒழுங்குகள் குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படுகிறது. அத்துடன் Nurses, Accountant, BioMedical Science Diploma முடித்தவர்கள் ஆகியோருக்கு குடும்பமாக (Family Visa)

CANADA TOURIST VISA அரசாங்கத்தில் பதிவு செய்து இலங்கையில் எப்பாகத்திலும் சொந்த வியாபாரம் செய்பவர்கள், 4 மாதங்கள் நன்கு பேணப்பட்ட வங்கி கணக்கு உடையவர்களுக்கு Canada வுக்கு Tourist Visa ஒரு மாத காலத்திற்குள் பெற்றுத் தர ஆலோசனை வழங்கப்படும்.

CYPRUS - நாட்டில் மேலதிக படிப்புக்கு செல்பவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் Visa ஒழுங்குகள். இவ்விசா மூலம் Paris, Swiss, Italy, Germany போன்ற நாடுகளுக்கு சென்று வரலாம். மொத்த செலவு 600,000 மட்டுமே.

**Rainbow Travels**

தொடர்புகள்
0778980652
0212219596

30/2, Third Lane,
Power House Road,
Jaffna.

(C-829)

## JAFFNA COLLEGE, VADDUKODDAI ADMISSION - 2013 FOR GRADE 1 AND GRADE 6

மாணவர் அனுமதி- 2013

தரம் 1 & தரம் 6

1. (அ) விண்ணப்பப்படிவங்கள் 03.09.2012 முதல் 29.09.2012 வரை பெற்றுக் கொள்ளலாம்.
   (ஆ) எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
   (இ 29.09.2012 இற்கு பின்னர் விண்ணப்பப்படிவங்கள் எக்காரணம் கொண்டும் விநியோகிக்கப்படமாட்டாது.
   (ஈ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 01.10.2012. குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களை நிராகரிக்கும் உரிமை நிர்வாகத்திற்கு உண்டு.
2. பிழையாக நிரப்பப்பட்டவையும் பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படலாம்.
3. தரம் 1 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் நிழற்பிரதி (Photostat copy) இணைக்கப்படவேண்டும்.
4. விண்ணப்பப்படிவங்கள் ஞாயிற்றுக்கிழமை, விடுமுறை தினங்களும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி முதல் மதியம் 2.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
5. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1000/=
6. வயதெல்லைகள்:-
   1) தரம் 1 விண்ணப்பதாரி 01.02.2007 இற்கும் 31.01.2008 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   2) தரம் 6 விண்ணப்பதாரி 01.02.2002இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
7. பிரவேச நேர்முகப்பரீட்சை:-
   1) தரம் 1 இற்கான நேர்முகப் பரீட்சை 10.10.2012 மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.
   2) தரம் 6 இற்கான தேர்வுப் பரீட்சை 13.10.2012 மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.
   தேர்வு பரீட்சை முடிவுகள் இரு வாரங்களில் வெளியாகும்.
8. மிகச் சிறந்த கல்விப் பெறுபேறுகளை உடைய மாண்வ மாணவிகளுக்கு அனைத்து வசதி வாய்ப்புகளுடனும் கூடிய விடுதி, நூலகப் பாவனை மற்றும் சிறந்த புலமைப் பரிசில்கள் எம்மால் வழங்கப்படும்.

அதிபர்

(சி-826)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

21

## துட்டகாமினி மன்னன்

**துட்டகாமினி அபயன்**

காமினி அபயனும், சத்தாதீசனும் படைக் கலப்பிரயோகத்தில் மிக்க திறன் பெற்றவர்களாக விளங்கினர். காமினியை மகாகமத்தில் வைத்திருந்த மன்னன், சத்தாதீசனைப் போர்வீரர்கள், யானைகள், தேர்கள் என்பவற்றுடன் திகவாவிப் பிரதேசத்தில் தங்கியிருக்குமாறு பணித்தான். தமிழர்களின் ஊடுருவலைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இது விளங்கியது. உருகுணையின் படை நிலலைகளைக் கவனித்த காமினி தமிழர்கள் மீது படையெடுக்க தந்தையிடம் இரண்டு தடவைகள் அனுமதி கோரினான். கவந்ததீசன் அவற்றைத் தடுத்துவிட்டான். "அவசரப்படாதே. மகாகங்கைக்கு இப்பாலுள்ள பிரதேசம் போதுமானது. தமிழர் படையில் பத்து இலட்சம் போர் வீரர்கள் உள்ளனர்; பொருத்தமான நேரம் வரும்வரை எல்லாளனுடன் யுத்தம் செய்யாதிரு" என ஆணையிட்டான்.

மூன்றாவது தடவையும் தந்தையிடம் எல்லாளன் மீது படையெடுக்க காமினி அனுமதி கோரினான். அதனையும் அரசன் தடுத்துவிட்டான். அதனால் ஆத்திரமுற்ற காமினி, "எனது தந்தை ஆண்பிள்ளையாயின் இவ்வாறு பேசமாட்டார்", என தகப்பனைப் பெண் என இகழ்ந்து, பெண்கள் அணியும் ஆபரணங்களை அவனுக்கு அனுப்பி வைத்தான். அதனால் காமினியை துட்டகைமுனு என இகழ்ந்த கவந்ததீசன் அவனைக் கைது செய்யும்படி ஆணை பிறப்பித்தான். அதனால் துட்டகைமுனு கொத்மலைப் பிரதேசத்துக்குத் தப்பி ஓடினான். அங்கு பெரும்படை திரட்டினான். காக்கைவண்ணதீசன் அதன் பின்னர் பன்னீராயிரம் பிக்குகளையும் பத்து மல்லர்களையும் அழைத்து, "என் பிள்ளைகள் தமக்குள் பிணக்குப்பட்டு போர் ஏற்படில் நீங்கள் எவர் பக்கமும் சாரக்கூடாது" எனச் சத்தியம் வாங்கிக் கொண்டான்.

துட்டகாமினி மலைநாட்டில் (கொத்மலை) இருந்த காலத்தில் கவந்தீசன் இறந்தான். திகாமடுல்ல (தீகவாபி) இருந்த சதாதீசன் விரைந்து மகாகமவிற்கு வந்து தன்னை மன்னாக அறிவித்தான். அதன் பின்னர் தாய் விகாரைமாதேவியையும் பட்டத்து யானை கண்டுலனையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு தீகவாபி மீண்டான். எனினும் துட்டகாமினியுடன் விரைந்து சென்று தன் அரசுரிமையை நிலைநாட்டினான். தாயையும் கண்டுலனையும் பெற சதாதீசனுடன் சண்டையிட நேர்ந்தது. பிக்குகளும் தாயார் விகாரைமாதேவியும் சகோதரர்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்தினர்.

அதன் பின்னர் இருவரும் இணைந்து எல்லாளன் மீது படையெடுக்க நடவடிக்கை எடுத்தனர். முதலில் சதாதீசன் தீகவாவிப்பிரதேசத்தில் அதிக அளவு தானியங்களை உற்பத்தி செய்து பொருளாதா்ர நிலையை வலுப்படுத்தினான். துட்டகாமினி இராணுவ பலத்தைப்பெருக்கி கொண்டான்.

**துட்டகாமினி- எல்லாள யுத்தம்**

திஸ்ஸமகாராம விகாரை மகாசங்கத்திடம் அனுமதி பெற்று எல்லாளன் மீது படையெடுத்தான். 500 பிக்குகளும் தாய் விகாரைமாதேவியும் துட்டகாமினியின் படைகளுடன் சென்றனர். துட்டகாமினி, எல்லாளனுக்கு எதிரான யுத்தத்திற்கு இனத்தோடு மதத்தையும் முன்வைத்தான். "எனது படையெடுப்பு வெறும் அரசபோகங்களை அனுபவிப்பதற்கல்ல. மாறாக புத்தசாசனத்தின் உன்னதத்திற்கான போர் தொடுக்கின்றேன்" என்ற கவர்ச்சியான சுலோகத்தை துட்டகைமுனு அறிவித்திருந்தான். உண்மையில் எல்லாளனுக்கு எதிராக சமயரீதியாகவோ, இன ரீதியாகவோ எதிர்ப்பு ஏற்பட எதுவித அடிப்படையும் கிடையாது. நேர்மையும் பாராபட்சமின்மையும் கொண்ட நீதிமிக்க மன்னன் அவன். எல்லாளன் போன்ற செங்கோல் தவறாத அரசன் ஒருவனைப் போரில் முறியடிப்பது இலகுவன்று. எனவே தான் துட்டகாமினி இந்தக் கவர்ச்சியான சுலோகத்தைப் பயன்படுத்தினான். 'பௌத்த பிக்குகள் யுத்தமொன்றுடன் தொடர்புபடும் சம்பவம் வரலாற்றில் இதுவே முதல் தடவை'.





துட்டகாமினி-எல்லாளன் யுத்தம் -சித்திரம்

எல்லாளனின் பல்வேறு அரண்களை துட்டகைமுனு வெற்றி கொண்டான். முதலில் மஹியங்கனையில் சண்டை நிகழ்ந்தது. அதில் வெற்றி கொண்ட துட்டகைமுனுவின்படை அதனைத் தொடர்ந்து, அம்பதீர்த்தம், சர்ப்பக்கோட்டை, அந்தரசொப்பம், நாளி சொப்பம், கச்சதீர்த்தம், கொத்த நகரம், நந்திக்கிராமம் என்பவற்றைக் கைப்பற்றியபடி விஜிதபுரத்தை அடைந்தது. அம்பதீர்த்தம் என்றவிடத்தில் அமைந்திருந்த எல்லாளனின் படையரணை, நான்கு மாதங்களாக முற்றுகையிட்டும், துட்டகாமினியால் வெற்றி கொள்ள முடியவில்லை. அம்பதீர்த்தத்தின் படைத்தளபதி தித்தம்பன் பெண் விடயத்தில் மிகவும் பலவீனமானவன். இப் பலவீனத்தைத் துட்டகாமினி தன் வெற்றிக்குப் பயன்படுத்திக் கொண்டான். தனது கவர்ச்சியான தாயார் விகாரமாதேவியை தித்தட்பனின் முன் பார்வைக்கு நிறுத்தினான் என மஹா வம்சம் குறிப்பிடுகின்றது. மஹா வம்சம் கூறுகின்ற இந்தச் சந்தேகக் குறியிலிருந்து, சரியான அனுமானத்தைப் பெறுவது கடினமெனவும் எனினும் திக்கா நூலின்படி எதிரியுடனான தாயின் திருமணத்துக்கு அரசியல் இலாபம் கருதிய துட்டகாமினியின் சம்மதம் இருந்தது என மஹா வம்சத்தின் ஆங்கில மொழிபெயர்பாளராகிய கெய்கர் அந்நூலின் அடிக்குறிப்பில் குறித்துள்ளார். இலங்கை வரலாறு என்ற நூலின் மூன்றாம் அத்தியாயத்தை எழுதிய வரலாற்றறிஞர் பரணவிதான, நான்கு மாதங்களாகியும் கோட்டையைக் கைப்பற்ற முடியாதுபோன துட்டகாமினி தமிழ்ப்படை அதிகாரியின் பெண் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டானெனவும், துட்டகாமினி விரித்த பொறியில் தமிழ்ப் படைத் தளபதியை வீழ்த்துவதற்கு, அவனின் தாய் விகாரைமாதேவியே விரும்பி முன்வந்தாளெனக் குறித்துள்ளார்.

(தொடரும்)

துட்டகாமினியின் ஆக்கிரமிப்பிற்குப்பின் ஆகம முறைப்படியான பூசை நிறுத்திவைக்கப்பட்ட -கதிர்காமத்திருவிழா-தற்காலத்திற்குரியது






துட்டகாமினியும் அவனது கந்துல யானையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளிடம் ஒற்றுமை இருந்திருந்தால் தமிழீழக் கொடி பறந்திருக்கும்

## கலைஞர் கருணாநிதியின் உருக்கம்



ஒற்றுமை இல்லாததாலேயே ஈழப் போராளிகளுக்குத் தோல்வி ஏற்பட்டது என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

ஈழத் தமிழர் வாழ்வுரிமைப் பாதுகாப்பு மாநாடு சென்னையில் கடந்த 12 ஆம் திகதி நடைபெற்றது.

இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பான விளக்கக் கூட்டம் சென்னை அம்பத்தூரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈழத் தமிழர் வாழ்வுரிமையை மீட்பதற்காக டெசோ மாநாட்டை தி.மு.க. நடத்தியபோது சிலர் கண்டனம் தெரிவித்தனர். ஓர் இனத்தின் இழிவைத் துடைப்பதற்கான பணியில் ஈடுபடும்போது இதுபோன்ற கண்டனங்களைச் சந்திப்பது என்பது எதிர்பார்த்த ஒன்றுதான்.

1956 ஆம் ஆண்டு சிதம்பரத்தில் நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுவில் தமிழீழத்தை வலியுறுத்தும் தீர்மானத்தை முன்மொழிந்து படித்தேன். ஈழத் தமிழர்களுக்காக நான் குரல் எழுப்பிய போதெல்லாம் ஒரு காலத்தில் என்னோடு இணைந்து குரல் கொடுத்த ஒரு சிலர் இப்போது எதிர்த்துக் குரல் எழுப்புகின்றனர்.

நாதசுர கச்சேரி நடைபெறுகிறது. அப்போது ஒரு வித்துவான் ஒரு வகையிலும் மற்றொரு வித்துவான் வேறு வகையிலும் இசையை வழங்கினால் அது இசையாக இருக்காது. கேட்க சகிக்காது.

வீரம், ஆற்றல் உட்பட அனைத்திலும் யாருக்கும் சளைக்காதவர்களாக ஈழப் போராளிகள் இருந்தும் இறுதிப் போரில் தோல்வியுற்றனர். போரில் ஈடுபட்ட தளபதிகள் பலரும் மடிந்தனர்.

இதற்குக் காரணம் ஈழப் போராளிகளிடையே ஒற்றுமை இல்லாததுதான். டெசோ மாநாடு மதுரையில் நடைபெற்றபோது ஈழப் போராளிகளை எல்லாம் என் கை மீது அவர்கள் கைகளை வைத்து அனைவரும் ஒற்றுமையாக இருப்போம் என்று சத்தியம் செய்ய வைத்தேன். டெலோ, விடுதலைப்புலிகள் உட்பட எல்லா அமைப்புகளும் சத்தியம் செய்தன.

அந்த சத்தியத்தைக் கடைப்பிடித்திருந்தால் இப்போது ஈழம் கிடைத்திருக்கும். வெற்றி பெற்றதற்கான ஈழக் கொடி அங்கு பறந்து கொண்டிருக்கும்.

எனவே, ஒற்றுமையாக இருந்தால் ஈழம் கிடைத்திருக்கும். இந்தக் கருத்து ஈழத்துக்கு மட்டுமல்ல தி.மு.க.வினருக்கும் பொருந்தும்.

**ஐ.நா.வில் தீர்மானம்**

டெசோ மாநாட்டுத் தீர்மானங்களை தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலினும் நாடாளுமன்றக் குழுத்தலைவர் டி.ஆர்.பாலுவும் இன்னும் 20 நாட்களில் ஐ.நா.சபைக்கு நேரில் சென்று கொடுக்க உள்ளனர் என்றார் கருணாநிதி. (அ-2)

## பண்ணிசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலைய ஆதரவுடன் அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் இலவசத் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்பு யாழ்.சிவதொண்டன் நிலைய கொழும்புத்துறை மகளிர் ஆச்சிரமத்தில் வாராந்தம் செவ்வாய்க் கிழமைகளில் பிற்பகல் 5 மணி முதல் நடைபெற்று வருகிறது.

வட இலங்கை சங்கீத சபையினதும் அகில இலங்கை திருமுறை மன்றத்தினதும் பாட விதானங்களுக்கு அமைவாக மன்ற தேவாரப் பண்ணிசை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொம்மை ஆட்சி வேண்டுமா நல்லாட்சி வேண்டுமா?

## மக்களே தீர்மானியுங்கள்-ஹக்கீம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் பொம்மை ஆட்சி வேண்டுமா அல்லது அதிகாரங்களுடன் கூடிய நல்லாட்சி வேண்டுமா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும். அங்கு ஆளுநர் மேலாதிக்கச் சக்தியை பிரயோகிக்கும் பொழுது முதலமைச்சரால் பெரிதாக எதையும் சாதித்து விட முடியாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஏறாவூரில் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் பொழுதே ஹக்கீம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்,

கட்சியின் வெற்றிப் பாதையை நோக்கிய திக்குத் திசைகள் பற்றியும் அடுத்த கட்ட நகர்வுகள் பற்றியும் நாம் நிதானமாக சிந்தித்து மிகவும் சாதுரியமாக கையாள வேண்டிய நிலைமையில் இருக்கின்றோம்.

இந்தக் கட்சியின் வெற்றியைத் தட்டிப் பறித்து விடலாம். கொச்சைப்படுத்தி விடலாம் என்றவாறு தடியெடுத்தவர்களெல்லாம் வேட்டைக்காரராகியிருக்கிறார்கள்.

பலவிதமான சவால்களையும் கண்டங்களையும் தாண்டிச்செல்ல வேண்டியுள்ளது. இதற்கு முன்னரும் தேர்தல்களின் போது பல சவால்களையும் நெருக்கடிகளையும் சந்தித்திருக்கிறோம். மக்கள் வாஞ்சையோடு கட்சியை அரவணைக்க முன்வந்துள்ளனர்.

இந்தத் தேர்தல் மிகவும் நம்பகத் தன்மையான தேர்தலாக இருக்க வேண்டும். ஏனெனில் சிறுபான்மைச் சமூகங்களின் அதிகபட்ச ஆதரவைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரசும் பங்குபற்றும் இத்தேர்தலை சர்வதேச சமூகம் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கின்றது.

வாக்களிப்பு வீதத்தைப் பொறுத்து பெறுகின்ற ஆசனங்களின் ஏற்ற இறக்கங்கள் தங்கியுள்ளன. எமது மக்களின் வாக்களிப்பு வீதத்தை அதிகரிக்கச்செய்யும் முயற்சிகளில் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்றார். (அ-2)

# இராமேஸ்வரம் மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்கவில்லை

## கடற்படைப் பேச்சாளர்

இந்திய இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் மேற்கொள்ளவில்லை என கடற்படைப்பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

சுமார் 200 படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் மேற்கொண்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே கடற்படை பேச்சாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் மீன் பிடித்துக்கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் மேற்கொள்ளவில்லையெனவும் அவர்களின் பொருட்களை சேதப்படுத்தியதாக தெரிவிக்கப்படுகின்றமை உண்மைக்கு புறம்பானது எனவும் கடற்படைப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# கிழக்கு மாகாண சபையை கூட்டமைப்பு கைப்பற்றும்

## சம்பந்தன் எம்.பி. திட்டவட்டம்

(அம்பாறை)

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே கைப்பற்றும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திட்டவட்டமாக தெரிவித்தார்.

வேம்பு பிரதேச கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தற்போது தமிழ்பேசும் மக்களுடைய பிரச்சினை சர்வதேச மயமாக்கப்பட்டுள்ளது. தேசியப் பிரச்சினை சம்பந்தமாக சர்வதேச சமூகம் ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமை ஊடாக சில தீர்மானங்கள் எடுத்துள்ளது.

அந்தத் தீர்மானங்களையடுத்து இலங்கை அரசு திணறிக்கொண்டிருக்கும் சூழலில் அதனை முறியடிப்பதற்காக தமிழ் மக்கள் அரசுடன்தான் இருப்பதாக காட்டுவதற்காகத்தான் இலங்கை அரசு இந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துகின்றது.

இதேவேளை யுத்தத்தின் இறுதிக் காலத்தில் மனித உரிமைச் சட்டங்கள் மீறப்பட்டுள்ளதாகவும் அந்த மீறல்கள் சம்பந்தமாக விசாரணை நடைபெற்று பக்கச்சார்பற்ற நேர்மையான அறிக்கை வெளியிட வேண்டும் என்ற கருத்து வந்திருக்கின்றது.

இந்த சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டு போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டதா? மனித நேயத்துக்கு மாறாக போர் இடம்பெற்றதா? என்ற கேள்விகளுக்கு பதில் கூற வேண்டிய நிலையில் அரசு சர்வதேச அரங்கில் இருக்கின்றது.

2010 வடமாகாண தேர்தல் நடக்குமென 2009 ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார். பின்னர் 2011 ஆம் ஆண்டு நடைபெறும் என்று 2010 ஆம் ஆண்டில் கூறினார். அதன் பின்னர் 2011 இல் நடைபெறும் என்று 2012 இல் கூறினார். தற்போது 2013 இல் நடைபெறும் என்று கூறுகின்றார்.

ஏன் முதல் கூறப்பட்ட ஆண்டுகளில் வடக்குத் தேர்தலை மஹிந்த அரசு வைக்கவில்லை?

அடுத்த மாதம் நடக்கவிருக்கும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மட்டக்களப்பில் 8 ஆசனங்களையும் அம்பாறையில் 4 ஆசனங்களையும் திருகோணமலையில் 5 ஆசனங்களையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றும். அத்துடன் 2 போனஸ் ஆசனங்களையும் கூட்டமைப்பு பெறும்.

எனவே, தமிழ் மக்கள் தமது ஒட்டுமொத்த வாக்களிப்பு வீதத்தை அதிகரிப்பதன் மூலம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபையை தம்வசப்படுத்தி முதலமைச்சர் பதவியைக் கைப்பற்றும் என ஆணித்தரமாக தெரிவித்தார். (அ-2)

# இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவோம்

## விசேட தூதுவர் யசூசி அகாசி உறுதியளிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் ஜப்பானிய அரசுக்கும் இடையே காணப்படுகின்ற நெருக்கமான உறவு தொடர்கிறது. அந்த வகையில் நாம் தொடர்ந்தும் இலங்கை அரசோடு இணைந்து மீள்குடியேறிய மக்களுக்கான உதவிகளை மேற்கொள்கின்றோம் என ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி கிளிநொச்சியில் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அவர் கிளிநொச்சி 155 ஆம் கட்டை பகுதியில் அமைந்துள்ள ஐஓஎம் நிறுவனத்திற்கு சென்று மீள்குடியேற்றத்திற்கு பின்னர் அந்நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பணிகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்ட பின் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினரால் கிளிநொச்சி ஜெயந்திநகர் கிராமத்தில் மேற்கொள்ளப்படுகின்ற வாழ்வாதார உதவிகள், செயற்பாடுகளை நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது அங்கிருந்த மக்களிடம் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜப்பான் எப்பொழுதும் மக்களுக்கு மீன்களை வழங்குவதை விட மீன்பிடிக்க கற்றுக் கொடுக்கவே விரும்புகிறது. ஏனெனில் அப்போதுதான் மக்கள் தங்களுடைய சொந்தக் காலில் நிற்க முடியும். எனவே, இந்த வகையிலேயே நாம் மீள்குடியேறிய மக்களுக்கான உதவிகளை அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களூடாக வழங்கி வருகின்றோம் எனத் தெரிவித்தார்.

இவ் விஜயத்தில் நேரடியாக ஒரு சில மக்களின் வீடுகளுக்கு சென்ற அவர் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் மூலம் வாழ்வாதார உதவிகள் பெற்ற பயனாளிகளையும் சந்தித்து கலந்துரையாடினார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க கட்டடத்திலிருந்து விரைவில் வெளியேறுங்கள்

## பிரதியமைச்சர் வீரகுமாரவிடம் தேர்தல் திணைக்களம் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்க கட்டடத்திலிருந்து வெளியேறுமாறு பிரதியமைச்சர் வீரகுமார திஸாநாயக்கவிடம் தேர்தல் திணைக்களம் கோரியுள்ளது.

பிரதிஅமைச்சரும் அவரது ஆதரவாளர்களும் அரசாங்கத்திற்கு சொந்தமான விடுமுறை இல்லமொன்றில் தங்கியிருப்பதாகவும் உடனடியாக அந்த கட்டடத்தை விட்டு வெளியேறுமாறும் கோரப்பட்டுள்ளது.

அநுராதபுரத்தில் தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்ளும் நோக்கில் பிரதியமைச்சர் அந்தக் கூட்டத்தில் தங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சசுக்கு சொந்தமான கட்டடத்திலேயே பிரதியமைச்சர் தங்கியிருந்ததாக குறிப்பிடப்படுகிறது. பிரதியமைச்சர் வீரகுமார திஸாநாயக்க, வீடமைப்பு அமைச்சரும் ஜே.என்.பி.யின் தலைவருமான விமல் வீரவன்சவின் கட்சியை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அநுராதபுரத்தில் இடம்பெற்று வரும் தேர்தல் வன்முறைச் சம்பவங்களை கண்காணிப்பதற்காக 11 அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-2)

# ஹெரோயின் வைத்திருந்த நால்வருக்கு ஆயுட்கால சிறை

## கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த குற்றத்திற்காக நால்வருக்கு ஆயுட்கால சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது.

குறித்த நால்வரும் 52 கிராம் எடையுள்ள ஹெரோயின் போதைப்பொருளுடன் கொழும்பு பாலத்துறை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இவர்கள் 1999 ஆம் ஆண்டு ஒக்டோபர் 9 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த நாளொன்றில் கைது செய்யப்பட்டுள்ளனர். அன்று முதல் நடைபெற்ற நீண்ட வழக்கு விசாரணையின் பின்னர் இந்த நால்வர் மீதான குற்றங்கள் நிருபணமாகியுள்ளன.

இவர்களில் இருவர் சுமார் 13 வருடங்கள் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தீர்ப்பை அறிவித்த நீதிபதி கூறுகையில், 2 கிராமிற்கு அதிகமாக ஹெரோயின் போதைப்பொருளை உடன்வைத்திருப்பது மரண தண்டனை விதிக்கப்பட வேண்டிய குற்றம் எனவும் எனினும் தற்போது மரண தண்டனை நடைமுறையில் இல்லாததால் மரண தண்டனை வழங்குவது அந்தப் பட்டியலை நிரப்புவதாகவே அமையும் என்பதால் இவர்களுக்குஆயுள்தண்டனை விதித்து தீர்ப்பளிப்பதாக தெரிவித்தார். (அ-2)

# வெள்ளை வான் கடத்தல்கள் குறித்து விசாரணை நடத்துங்கள்

## மனிதவுரிமை ஆணைக்குழு வலியுறுத்து

வெள்ளைவான் கடத்தல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

வெள்ளைவான் கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பிலான முறைப்பாடுகளை விசாரிக்க பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தை மனிதவுரிமை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

வெள்ளைவான் கடத்தல் தொடர்பில் துரித கதியில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனிடம் மனிதவுரிமை ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

வெள்ளைவான் கடத்தல் மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பிலான பல முறைப்பாடுகள் நிலுவையில் கிடப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# பயண எச்சரிக்கையில் மாற்றம் எதுவுமில்லை

## பிரிட்டன் விடாப்பிடி

(கொழும்பு)

இலங்கைக்கான பயண எச்சரிக்கையில் மாற்றமில்லை என பிரித்தானியா அறிவித்துள்ளது. பயண எச்சரிக்கை தொடர்பில் பிரித்தானியா சில திருத்தங்களை மேற்கொண்டுள்ள போதிலும் இலங்கை விவகாரத்தில் முன்னர் வெளியிட்ட கருத்துக்களில் மாற்றமில்லை என பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு அறிவித்தள்ளது.

தேசப்பற்றுடைய அமைப்புக்கள் மற்றும் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் இதனால் இலங்கைக்கு விஜயம் செய்யும் பிரித்தானிய பிரஜைகள் அவதானத்துடன் செயற்பட வேண்டுமெனவும் பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்த பயண எச்சரிக்கைக்கு இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

(அ-2)

# இசட்புள்ளி பிரச்சினைகள் தொடர்பில் தண்டனை வேண்டும்

## தந்தையிடம் கோரினார் மகன்

(கொழும்பு)

உயர்தரம் இசட்புள்ளி பிரச்சினையுடன் தொடர்புடைய அனைவருக்கும் தண்டனை விதிக்கப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

இந்த சர்ச்சையுடன் தொடர்புடைய தனிப்பட்ட நபர்கள், நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் ஆகியவற்றக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த கோரிக்கைக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் உச்ச நீதிமன்றின் உதவியை நாட நேரிடும். நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்து குற்றவாளிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்கபோவதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சுதந்திரத்தை பெற்றுக்கொள்ள த.தே.கூட்டமைப்பை ஆதரியுங்கள்

## முன்னாள் எம்.பி. சந்திரநேரு தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர்களின் உரிமையை, சுதந்திரத்தை கோருகின்ற ஒரேகட்சியான தமிழ் தேசிய கூட்டமைப்பை தமிழர்கள் ஆதரிப்பதன் மூலமே அதனை உறுதிப்படுத்த முடியும். இது எமக் கான கடைசி சந்தர்ப்பம் என அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழனன்று கல்முனையில் நடைபெற்ற தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமக்கு திணிக்கப்பட்ட இத்தேர்தல் தமிழ் தேசியத்தையும் எமது உரிமையையும் இணைந்த வடக்கு கிழக்கினையும் சுதந்திரத்தையும் பெறுவதற்கு இந்த அரசாங்கம் ஒரு சந்தர்ப்பத்தை எமக்கு தந்துள்ளது.

தமிழர்களின் உரிமையை, சுதந்திரத்தை கோருகின்ற ஒரே கட்சியான தமிழ் தேசிய கூட்டமைப்பை தமிழர்கள் ஆதரிப்பதன் மூலமே அதனை உறுதிப்படுத்த முடியும். இது எமக்கான கடைசி சந்தர்ப்பம். எமக்கு பக்கபலமாக புலம் பெயர்ந்த எமது உறவுகள் உள்ளன.

எமக்கு உரிமை வேண்டும். எமது தேசியம் வேண்டும். எங்களது காணி எமக்கு வேண்டும். எம்மை நாமே ஆள வேண்டும். எமது நியாயமான போராட்டத்தின் வெற்றி வெகு தொலைவில் இல்லை.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் கரங்களை பலப்படுத்துவோம். எமது உரிமையை வென்றெடுப்போம் வாழ்க தமிழ்! என தனது உரையில் குறிப்பிட்டார். (அ-2)

## தமிழர் விடுதலைக்கூட்டணி அலுவலகம் இடமாற்றம்

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைச் செயலகம் இன்று ஞாயிற்றுக்கிழமையில் இருந்து கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தனது பணிமனை இடம் மாறியுள்ளது. இன்றிலிருந்து தமது நடவடிக்கைகள் அனைத்தும் மேற்படி முகவரியில் அமைந்துள்ள பணிமனையிலேயே இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இன்றைய தின தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் காலம் சென்ற அ.அமிர்தலிங்கத்தின் பிறந்த தினத்தையொட்டி காலை 8 மணிக்கு இங்கு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (அ-2)



இலங்கை வங்கியின் மெகாவாசி சீட்டிழுப்பின் மூலம் வெற்றி பெற்றவர்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியிலுள்ள வங்கியின் அதி மேற்தரக் கிளையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.என்.மாணிக்கசிங்கி மங்கல விளக்கேற்றுவதையும் வங்கியின் யாழ்.மாவட்ட அதி மேற்தரக்கிளையின் முகாமையாளர் ரி.ஜேசுதாசன் உரையாற்றுவதையும் , பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் தின் வணிக முகாமைத்துவ கற்கைநெறிகள் பீடாதிபதி கலாநிதி வேல்நம்பி சீட்டிழுப்பிலில் வெற்றி பெற்றவர்களுக்கு காசோலை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்தத்தின் எழுச்சியும் தமிழ் சமூகத்தின் இருப்பும்



இந்திய கலாசார அமைச்சர் குமாரி செல்ஜா இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோது (கடந்த வாரம்) இரண்டு முக்கிய விழாக்களில் பங்கு பெற்றார்.

ஒன்று கபிலவஸ்துரிலிக்ஸ் என்று கூறப்படும் புத்தரின் நினைவுப் பொருளை தன்னுடன எடுத்து வந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச விடம் கையளித்தது.

மற்றொன்று மன்னாரில் பாடல் பெற்ற தலமான கோவிலை இனப் போரின் அதிர்வுகளுக்குப் பின்னர் இந்திய அரசு ஆதரவுடனான சீரமைப்புப் பணிகளைத் தொடங்கி வைப்பது.

முத்லாவது, பௌத்தமக்களின் நீண்டகால அபிலாசைளை தீர்த்து வைக்கும் முகமாக எடுக்கப்பட்ட முயற்சி.

இரண்டாவது, இந்திய அரசு தமிழர் பகுதிகளில் இனப் போருக்குப் பின்னரான புனரமைப்புப் பணிகளைக் கண்டறிந்து முன்னெடுத்த வகையில் ஓர் பங்காகும்.

இலங்கையிலுள்ள தமிழர்களாகட்டும் அல்லது பௌத்தர்களாகட்டும் இரு இனத்தவருமே இந்தியாவுடனான தங்களது இனம், மொழி, மதம் மற்றும் கலாசார உறவுகளை வெளிப் படையாகவேபேசி மகிழ்பவர்கள். இதில் தமிழ் நாட்டிலுள்ள கோவில்களுக்கு இலங்கைத் தமிழ் மக்கள் சென்று தங்களது பல்வேறு நேர்த்திக் கடன்களை செய்துவருகிறார்கள். சிங்கள - பௌத்த மக்களுக்கு வட இந்தியாவிலுள்ள புண்ணிய இடங்களுக்கு சென்று பிரார்த்தனை செய்வதே தங்களது வாழ்வின் மிகப்பெரிய நேர்த்திக் கடனாக இருந்து வந்துள்ளது. இலங்கையிலுள்ள முஸ்லிம் இனத்தவர்களுக்கு மக்காவே போற்றுதற்குரிய வழிபாட்டுத் தலம். அவர்களும் இந்தியாவிலுள்ள புனித தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருகின்றார்கள். இலங்கை வாழ் கிறிஸ்தவர்களும் இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள மத தலங்களுக்குச்சென்று வருகிறார்கள்.

கபிலவஸ்துரிலிக்ஸ் வழிபாட்டுப் பொருட்களை பௌத்த மதத்தினர் போற்றிய அளவுக்கு மன்னார் கோவில் பணிகள் குறித்து தமிழ் பத்திரிகைகள் செய்தி வெளியிடவில்லை என்பதே உண்மை. இந்த இரு் நிகழ்வுகளையும் ஒரே தட்டில் வைத்து பார்க்கக் கூடாதுதான். ஆனால், இது இந்தியா சார்ந்த

**நன்றி: இணையம்**

விடயம் மட்டுமல்ல. ஏன் இங்குள்ள தமிழ் மக்களில் பெரும்பாலானோரின் மதநம்பிக்கை குறித்த விடயம் மட்டுமல்ல. அவற்றிற்கும் அப்பால் சென்று பொதுவாகவே மதம் குறித்த மக்களின் ஆழ்ந்த உணர்வுகளை குறித்த படிப்பினையென்று கூடச்சொல்லலாம். இந்த ஆழ்ந்த உணர்வுகளின் தாக்கத்தை சரியாக புரிந்துகொண்டால், இன அரசியல் குறித்த மக்களின் மன நிலையையும் புரிந்து கொண்டு அறிவுப் பூர்வமாக செயற்பட்டு அனைத்து மக்களுக்கும் ஏற்புடைய தீர்வு திட்டமொன்றை செயற்படுத்த முடியும்.

பொதுவாகவே சிங்களவர்களுக்கு மொழியைவிட மதத்தின் மீதான நம்பிக்கை அதிகம். இலங்கைத் தமிழ் மக்களுக்கோ மத நம்பிக்கை தனிநபர் விடயமாகவும் அதோடு தொடர்புடையதாக கருதப் படும் மொழிப்பற்று அதிக அளவிலும் போற்றப்பட்டு வருகிறது. இறைவன் அழித்த மொழியென்ற வகையில் இறைவனைப் போற்றி துதிக்கும பல்லாயிரக்கணக்கான பாடல்களும் பதிகங்களும் பதிக்கப் பட்டதும் தமிழ்மொழியில்தான். தற்காலத்தைப் பொறுத்த வரையில் கல்வியோடு இணைந்த வேலை வாய்ப்பு என்று வந்த பின்னரே மொழி ஓர் அரசியல் கருவியாக உருவெடுத்தது.

"சிங்களம் மட்டும்" என்ற அரசின் மொழிக்கொள்கை உருவானதை அடுத்து, தமிழும் இறைவனின் மொழி என்ற அந்தஸ்தில் இருந்து ஒருபடி இறங்கி அரசு பணிகளுக்கு மட்டுமல்ல அது குறித்த, அரசியலுக்கும் பயன் பட்டது.

இனப்பிரச்சினை, இனப்போர் என்றெல்லாம் கூறிவந்தாலும், பல்வேறு கருத்துகளும் வாக்குவாதங்களும் தற்சமயம் அரசியல்வாதிகளிடையே மொழி அளவிலேயே இன்றைக்கும் இருந்துவருகிறது. உதாரணத்திற்கு பிராந்தியங்களுக்கு அளிக்கப்படவேண்டிய பொலிஸ் அதிகாரம் குறித்த, பிரச்சினையில் தொங்கி நிற்பதும்கூட தமிழ் மக்களுக்கு அரசுடனான தங்களது அலுவல்களை தங்களுக்கு அறிந்த மொழியில் செயற்படுத்த முடியவில்லை என்ற ஆதங்கமே அடிப்படை என எண்ணப் படுகிறது.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப் படும்போது பிராந்தியங்களுக்கு பொலிஸ் அதிகாரம் என்ற வகையில் முடிவுகள் எடுக்கப்படுமேயானால் அதனூடாக, அரசியல்வாதிகளுக்கு பயன் ஏற்படலாம். ஆனால், தமிழ் மக்களுக்கு அதிலும் வடக்கு மாகாணத்திற்கு வெளியே வாழும் தமிழர்களுடைய அன்றாட, அரசு சார்ந்த பிரச்சினைகளுக்கு இது முடிவு ஆகாது. அவர்களுடைய கவலைகளுக்கு பதிலளிக்கும் வகையில் அரசு அலுவலகங்களில் தமிழ் மக்கள் அதிக, சரியான எண்ணிக்கையில் பணியில் அமர்த்தப்பட்டால் மட்டுமே அவர்களது பிரச்சினைக்கு விடிவு காலம் பிறக்கும். அப்படியானால், இது தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுகின்ற போக்கிலேயே அமையமுடியும்.

இன்னும் சொல்லப்போனால், அரசியல் ரீதியாக மட்டும் செயற் படாமல் தமிழ்த் தலைமை தங்களது மக்களின் அன்றாட தேவைகளை உணர்ந்து அறிந்து அதனோடு ஒட்டிய தீர்வு, தீர்மானங்களையே முன்வைக்க வேண்டும். அவ்வாறு செயற்படாத எந்த ஒரு அரசியல் தீர்வும் இந்தப் பிரச்சினையை பிறிதொரு காலத்தில் தட்டியெழுப்பவே செய்யும்; முடிந்த முற்றுப்புள்ளியாக அமையாது. அந்த வகையில் 13-வது திருத்த, தீர்வுத் திட்டத்தைக்கூட இன்றைய தமிழ் மக்களின் சூழ்நிலைக்கு மட்டுமல்ல, அவர்களது தேவைகளுக்கும் ஏற்ப மாற்றியமைக்கக் கோரும் வகையிலேயே தமிழ் அரசியல் தலைமை சிந்திக்க வேண்டும்; செயற்பட வேண்டும்.

கடவுள், கல்வி, கலாசாரம் என்பதற்கும் அப்பால் சென்று அன்றாட தேவைகளுக்கு ஏற்ப கல்வி அறிவு பெற்று தங்களது தகுதிகளுக்கு ஏற்ப வேலை வாய்ப்பை அடைந்து வந்துள்ளமை தமிழர்களின் முன்னேற்றத்திற்கு இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முந்தைய காலகட்டத்தில் வழிவகை செய்து வந்துள்ளது; ஆனால், சுதந்திரத்திற்குப் பின்னரே சிங்களம் மட்டும் மற்றும் பல்கலைக்கழக கல்விக்கான தரவரிசைப்படுத்தல் ஆகியவையே இனப்பிரச்சினைக்கு முக்கிய காரணிகளாக அமைந்தன என கூறுவதில் அர்த்தமிருப்பதாக தெரியவில்லை. அதற்கு முந்தைய வரலாற்றுக் காலங்களில் இருந்தே மதத்தை அடிப்படையாகக் கொண்ட ஆக்கிரமிப்பை, தமிழ் மக்களின் பாரம்பரிய இடங்களில் தேவநம்பிய தீசனும் தமிழர் மீதான யுத்தத் திணிப்பை துட்டகாமினியும் செய்து விட்டனர் என்பது வரலாறு.

பிரித்தானியர் காலத்திற்கூட வேற்றுநாட்டு மொழியான ஆங்கிலத்தில் மிக எளிதில் புலமைத்துவம் பெற்ற தமிழ் மக்களால், சுதந்திரத்தின் பின்பு, அன்றாடம் தாங்கள் கேட்டு பழகிய மொழியான சிங்களத்தில் செயலறிவைப் பெற்றிருக்க முடியாதா? அவ்வாறான செயலறிவு பெற்றிருந்தால், அவர்களால் அரசு பணி மற்றும் அரசியல் ஆகிய தளங்களில் முன்னிலையில் இருந்திருக்க முடியாதா?

ஆனால், தமிழாள் ஒருவர், சிங்களம் கற்றால் மட்டும் சிங்களப் பேரினவாதிகள் அதனை ஏற்றுக் கொண்டிருப்பார்கள் என்று கூறிவிட முடியாது.

மாறாக அதுவேகூட, சிங்களவர்களது ஆதங்கத்திற்கும் அரசியலுக்கும் காரணமாக அமைந்து விட்டிருக்கும். அப்போது, தமிழ் மக்கள் மீதான அநீதிக்கான தர்க்கமும் தாக்கமும் வேறுநிலைகளில் இருந்திருக்கலாம்.

இனப்போர் மற்றும் அதற்குப் பிந்தைய தற்போதைய காலகட்டத்தில் தமிழ் மக்கள் உண்மையிலேயே எதிர்பார்க்கும் அரசியல் தீர்வின் பல்வேறு அலகுகள் குறித்து வெளிப் படையாகவும் தொடர்ந்தும் தமிழ் சமுதாயத்தினுள் பேச்சு வார்த்தைகள் மற்றும் சர்ச்சைகள் நடத்தப்பட வேண்டும்.

இலங்கைத் தீவில் பௌத்தத்தின் எழுச்சி ஆனது, காலத்துக்குக் காலம் சைவத்தினதும் தமிழினதும் பண்பாடு, கலாசார, பொருளாதார சிதைவுகளின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

தேவநம்பியதீசன் காலத்தில் மகேசன் கோவிலை அழித்து அது இருந்த இடத்தில் மகிந்ததேரர் பௌத்தத்தை பரப்புவதற்காக விகாரை அமைக்கப்பட்டது.

செங்கோலோச்சிய நீதிவழுவாமன்னன் எல்லாளன் மீது அநியாயமாக துட்டகாமினி போர் தொடுத்ததும் பௌத்தத்தை தளைக்கச் செய்வதற்கே என்பதை வரலாற்று ஆவணங்கள் வெளிப் படுத்துகின்றன.

நவீன துட்டகாமினியாக சித்தரிக்கப்படும் ஜனாதிபதியின் உள் நோக்கமும் அதுவே என்பதை முள்ளிவாய்காலுக்குப் பிந்திய வட-கிழக்கில் பௌத்தத்தின் எழுச்சியும் சிங்களக் குடியேற்றங்களும் புலப் படுத்துவதுபோலுள்ளது என்பதை எந்த அறிவு ஜீவிகளாலும் புரிந்து கொள்ளாமல் இருக்கமுடியாது.

இந்நிலவரங்களை தமிழ்த் தலைமைகள் ஆழ்ந்து நோக்குவார்களா? தமிழர்களின் நிகழ்காலம் தன்னைத் தொலைத்துக் கொண்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்வார்களா? அல்லது சொர்ப்ப அதிகாரங்களை ருசிப்பதில் முழு ஆர்வம் காட்டுவார்களா...?

எதிர்கால தமிழ் சமூகத்தின் இருப்புக்கும், அவர்களின் கலை பண்பாடு, பொருளாதாரம் உறுதி பெற்று, ஆத்மார்த்தமான வாழ்க்கையை வாழ வழிசமைக்கும் செயற்றிட்டங்களை நெறிப்படுத்துவார்களா...? காலம்தான் பதில் சொல்லவேண்டும்.

இந்தியாவின் செல்வாக்கு, காலத் துக்குக் காலம் இலங்கை தமிழ் மக்களுடன் விளையாடியே வருகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக ஈழத்தமிழ் மக்கள் தமது அரசியல் நிலைக்களம் குறித்து விழித்துக் கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் விமோசனத்திற்காய் உழைத்த பெருமகன் அமிர்தலிங்கம்

**இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முன்னைநாள் செயலாளரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் இலங்கைப் பாராளு மன்றத்தின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான தலைவர் அ.அமிர்த லிங்கம் அவர்களின் 85 ஆவது அகவையை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**


கடந்த நூற்றாண்டு நமது இனத்தின் விடிவிற்காக உழைத்த தலைவர்கள் பலர் வாழ்ந்தகாலம். விடிவிற்கான தீர்வாக இவர்கள் மத்தியில் இரு கருத்தோட்டங்கள் காணப்பட்டன. ஒன்று இந்நாடு சுதந்திரம் பெறும் போது தமிழ் மக்கள் இந்நாட்டை ஆட்சி செய்யும் பாராளுமன்றத்தில் தமது இனத்தின் நலனைப் பேணுவதற்கான கூடிய பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருத்தல். ஒற்றை ஆட்சி அமைப்பிலேதான் இதற்கான வாய்ப்பு இருந்தது. இத்தகைய ஒற்றையாட்சி அமைப்பில் தமிழ் மக்களின் தனித்தேசியத் தன்மை பேணப்படமாட்டாது என்றும் சம அரசமைப்பில்தான் இது சாத்தியமாகும் என்ற கருத்தோட்டத்தில் செயற்பட்டவர்கள் மற்றைய பிரிவினர். இவ்வமைப்பில் தமிழ் மக்களின் தேசியத்தன்மை, தாயக உரிமை, சுயநிர்ணய உரிமை பேணப்படும் என்பதும் இவர்களின் சிந்தனையாகும். இத்தகைய சிந்தனையில் கருக்கட்டியால விருட்சமாக வளர்ந்ததுதான் இலங்கைத் தமிழரசுக்கட்சி. இதன் கால்கோள் விழா 1949 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18 ஆம் திகதி நடைபெற்றது.

1948 இல் நாடு சுதந்திரமடைந்த பின்னர் இயற்றப்பட்ட சட்டங்களில் நமது இனத்தின் ஒரு பிரிவினரான மலையகத்தமிழரின் வாக்குரிமையை பறித்து அவர்கள் பாராளுமன்றத்தில் பெற்றிருந்த பிரதிநிதித்துவத்தைப் பறித்த சட்டம் மிகவும் கொடியது. இதன் தாக்கத்தை தந்தை செல்வாவும் கோப்பாய் கோமான் கு.வன்னிய சிங்கமும் டாக்டர் இ.மு.வி.நாகநாதனும் அறிந்திருந்ததால் இதனை முழுமூச்சாக எதிர்த்ததோடு தந்தை அவர்கள் அப்போது கூறியது இது தான். இன்று மலையகத்தவருக்கு நடப்பது நாளைக்கு நமக்கு நடக்கப் போகிறது. அவரது பொருள் பொதித்த தீர்க்கதரிசன மிக்க இக்கருத்து சரியானது என்பதை சுதந்திர இலங்கையில் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட அநீதியான சட்டங்களும் கட்டவிழுந்துவிட்ட வன்முறைகளும் நிரூபித்தன.

இதனால் தமிழ் மக்களுக்குள்ள ஒரே வழி உரிமைகளைப் பெறுவதற்காகப் போராடுவதுதான் என்றார். இது வீரருக்குரிய வழி எனக் கூறித் தமிழ் மக்களின் விடுதலைக்காக உழைக்கும் இயக்கமாக இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார்.

இக்கட்சி பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியாக இறக்கும்போது கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் தமிழ் மக்களின் பிரச்சினையை இவர்களை விட்டு வேறு எவருடனும் தீர்க்க முடியாதென்றும் தந்தை செல்வாவுடன் பேசுவதன் மூலமும் ஒப்பந்தங்கள் செய்வதன் மூலமும்தான் இதற்குரிய தீர்வு கிட்டும் என்ற நிலைக்கு வளர்ச்சி கண்டது வரலாறாகும்.

இத்தகைய இயக்கத்தை வளர்த்தெடுப்பதில் தந்தையின் ஒப்பற்ற தலைமை, அவர் பெற்றிருந்த பொருளாதார வளம், அவர் செய்த தியாகம், அக்காலச் சூழ்நிலை ஆகியன முக்கிய பங்கினை வசித்தாலும் தந்தையின் தளபதிகளாக இணைந்த பலரின் பங்கு மிகமிகக் காத்திரமாகவிருந்தது. அவர்கள் சொத்துக்களை, சுகங்களைப் பொருட்படுத்தாது இவ்விடுதலையான வேள்வித் தீயிற்கு ஆகுதியானவர்கள். இவர்களில் இளம் அமிர்தலிங்கம் ஒப்பற்றவர். 1927 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 26 ஆம் திகதி வட்டுக்கோட்டை தொகுதியிலுள்ள பண்ணாகத்தில் பிறந்தவர். 1945 இல் இலங்கைப் பல்கலைக்கழகம் புகுந்த பட்டதாரியாகி, பின் சட்டக் கல்லூரியில் பயின்று 1951 இல் வழக்கறிஞரானார். மாணவனாக இருக்கும் போதே தமிழ் உணவர்வால் உந்தப்பட்டவர். பல்கலைக்கழகத்தில் தமிழ்ச் சங்கத்தை உருவாக்கி அதன் தலைவரானதோடு சட்டக் கல்லூரியின் தமிழ் மன்றத்தின் சிற்பியாக அதன் முதல் தலைவரான பெருமைக்கும் உரியவர். இத்தகைய பெருமைக்குரிய இளைஞன் அமிர்தலிங்கம் தமிழரின் உரிமைக்காக போராட உதயமான இயக்கத்தில் இணைந்தது வியப்பன்று. இதுபற்றி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வெள்ளிவிழா மலரில் இலட்சியப் பாதை என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரையில் பின்வரும் குறிப்புக் காணப்படுகிறது.


இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியுடன் (1983)

இணையாட்சியின் கீழ் தமிழ் இனத்தின் உரிமையைப் பெறுவதே எமக்குள்ள ஒரே வழி என்று செல்வநாயகம் பிரசாரம் செய்யத் தொடங்கினார். இக்கூட்டத்தில் இளைஞர்கள் சார்பில் பேசும் வாய்ப்பு அப்போது ஒரு சட்ட மாணவனாக இருந்த எனக்குக் கிடைத்தது. அன்றிலிருந்து தமிழ் மக்களின் அரசியலில் ஒரு புதிய சிந்தனை ஈழத்தமிழன் ஒரு தனித் தேசிய இனம்; அவனுக்கு ஒரு தனிப் பிரதேசம் உண்டு;அதை அவன் ஆளவேண்டும்; அதன் பொருளாதாரத்தை விருத்தி செய்து தமிழன் வாழமுடியும்; தென்னிலங்கையை நம்பி வாழமுடியாது. வாழத் தேவையுமில்லை; இப்புதுமையான கருத்துக்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பட்டி தொட்டிகளிலும் பட்டினங்களிலும் எதிரொலிக்கத் தொடங்கின. கருத்துக்கு கருத்து மாத்திரமல்ல கல்மாரியும் கிடைத்தது. பல இடங்களில் தமிழினம் செல்லவேண்டிய பாதை கல்லும் முள்ளும் நிறைந்தது. விஷ ஜந்துகள் நெளிவது, இரத்தமும் கண்ணீரும் சிந்தவேண்டியது என்பதை அந்த ஆரம்பக்கட்டத்தில் அனுபவத்திற் கண்டோம். ஆயினும் சளைக்காது பிரசாரம் வேகமாக நடைபெற்றது.

தந்தையின் தீர்க்கதரிசனமிக்க அரசியல் சிந்தனை மக்கள் மத்தியில் வேரூன்றிய போது ஏற்பட்ட இன்னல்களை மேற்கூறிய கருத்து தெட்டத்தெளிவாக உணர்த்துகின்றது. மந்திரிப்பதவிகளைக் பெற்று ஆளும் அரசுக்கு ஆலவட்டம் பிடித்து எப்படியும் சலுகைகளைப் பெற்றுக் காலத்தை ஓட்டலாம் என்று எண்ணியவர்களுக்கு ஒத்துழையாமை, போராட்டம், ஹர்த்தால், கதவடைப்பு, சத்தியாக்கிரகம், சிறைவாசம் போன்ற சொற்பிரயோகங்கள் அந்நியமாகவே தென்பட்டன. இவைதான் அன்றைய தமிழரின் உரிமைப் போராட்டத்தில் புழக்கத்திலிருந்த சொற்பிரயோகங்களாகும். இதனை உதட்டளவில் மட்டுமன்றி உள்ளத்தளவிலும் நிலைநிறுத்தி சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற மூத்த பரம்பரையுடன் இளைஞனாக இந்தப்பெரிய அஞ்சலோட்டத்தில் இணைந்து இறுதிவரை சளைக்காது ஓடிக் காலனின் பிடியில் மட்டும் தான் 1989 இல் செயலிழந்த மாவீரன் தலைவர் அமிர்தலிங்கம்.

1950 இல் தலைவர் அமிர்தலிங்கம் உருவாக்கிய வாலிப முன்னணி நாளடைவில் வலுப்பெற்ற முன்னணியாக வளர்ச்சி பெற்றதோடு 70 இல் உருவான தமிழ் இளைஞர் பேரவையின் முன்னோடியும் கூட. இப்பேரவைதான் துப்பாக்கிமுனையில் போராட முனைந்து செயற்பட்ட இயக்கங்களுக்கெல்லாம் முன்னோடி. மூத்த பரம்பரையுடன் இளைஞனாக இணைந்து அம்மூத்த பரம்பரையிடமிருந்து தலைமைப்பொறுப்பைத் தமது தியாகத்தால் பெற்று இளைஞர் பரம்பரையும் தன்னுடன் இணைத்து அவர்களையும் இயக்கவாதிகளாக ஆக்கிய பெருமைக்குரியவரும் இவர்தான். தலைவர் அமிர்தலிங்கத்தின் மேடைப்பேச்சே ஒரு தனிரகமானது. இதன் தாக்கத்தை இன்றும் அறியலாம். இவரின் பேச்சுநடையைப்பின்பற்றி இன்றும் மேடையில் பேசுபவர்கள் பலர் இருக்கின்றார்கள்.

உண்மையிலே அவரின் மேடைப் பேச்சில் தமிழ் விளையாடியது. இவரது கட்டுப்பாடான வாழ்வு, நாவன்மை, அஞ்சாமை ஆகியவற்றுடன் இவருடன் இயக்கத்திற்காகவே தம்மை அர்ப்பணித்த திருமதி மங்கையர்க்கரசியின் உணர்ச்சிமிக்க தமிழ்த் தேசிய கீதங்கள் மக்களை, குறிப்பாக இளைஞர்களை இச்சுதந்திர இயக்கத்தில் இணைத்தது. இதுபற்றி 1951 இல் திருகோணமலையில் நடைபெற்ற கட்சியின் முதலாவது மாநாட்டில் தந்தை அவர்கள் தெளிவாகப் பின்வருமாறு எடுத்துக் கூறியுள்ளார்.

இவ்வியக்கத்தில் பணிபுரியும் ஊழியர்களாகிய நாம் நம் தலைமுறையிலேயே நமது கோரிக்கை கைகூடுமென்று விசுவாசிக்கின்றோம். எம் தலைமுறையிற் கைகூடாவிடினும் நாம் இப்போரை நடத்தி எமக்குப் பின்வரும் சந்ததியரின் கையிற் கொடுப்பது எமது கடன். எம்பின்னே அரும்பெரும் வீரர்களை எம்மினம் பெறக்கூடும். குறைந்தபட்சத்தில் அவர்களுக்கு அணிவகுப்பவர்களாவாகினும் இருப்போமாக!

போராட்டங்களால் மட்டுமன்றி தமது அர்ப்பணிப்புக்களால் தமிழ்த் தேசியத்திற்கும் தமிழரின் தாயகத்திற்கும் ஒரு நிலையான முழுமையான வடிவம் கொடுத்த வரும் இவரே தான். இவை எல்லாவற்றிற்கும் மேலாக அவரது நாவன்மை உள்ளூரிலும் வெளியூரிலும் நமது இனத்துக்கே பெருமை சேர்த்தது. இவர் நாவசைத்ததால் தமிழ்மக்கள் தமிழ்த்தேசியத்தை இறுகப் பற்றி நின்றனர். பாராளுமன்றத்தில் 1956 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழர் பிரதிநிதிகள் ஆற்றிய உரைகளில் தலைவரின் உரை மிகக் காத்திரமானவை. குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலத்தில் பாராளுமன்றத்தில் தமிழரின் போராட்டத்திற்குரிய நியாயங்களை வெளிக்காட்டி எக்காரணங்கொண்டும் சரணடையமாட்டோம் என முழங்கிய உரைகள் சிறப்பானவை.


எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துடன் பாராளுமன்றத்தில் (1966)

தலைவர் அமிர்தலிங்கம் தமிழ்த் தேசியத்தை இறுகப் ப்ற்றி நின்றவர். மிகவும் நாணயமான மனிதரான இவர் எச்சந்தர்ப்பத்திலும் எதற்கும் விலை போகாதவர். இதய சுத்தியுடன் தமிழரின் விமோசனத்திற்காக உழைத்தவர். தியாகம் என்ற பதத்திற்கு இலக்கணமாக வாழ்ந்தவர். கொண்ட கொள்கைக்கான அர்ப்பணிப்பே இவரின் தாரக மந்திரம். இறுதி மூச்சுவரை எமது விமோசனத்திற்காக உழைத்தவர். நமது தலைவர்கள் எல்லாம் தத்தம் துறைகளில் ஈடுபட்டுத் தமது வாழ்வுக்கென நல்ல பொருளாதாரப் பின்னணியை உருவாக்கிய பின்னர்தான் அரசியலில் நுழைந்தவர்கள். ஆனால் தலைவர் அமிர்தலிங்கம் மட்டும் தான் இதற்கு விதிவிலக்கானவர். மாணவனாக இயக்கத்தில் இணைந்ததால் தமது அரசியல் வாழ்விற்கு நல்ல வசதியான ஒரு பொருளாதாரப் பின்னணியை இவரால் உருவாக்க முடியவில்லை. அரசியலில் முழுநேரமாக உழைத்ததால் சட்டத்தரணியாகப் பெறும் பொருளாதார வளத்தையும் பெருமளவுக்கு இழந்தார். எனினும் தூய்மையான அரசியலை நடத்தியவர். தலைவன் என்பவனின் வாழ்க்கை, அவனின் நடத்தை தொண்டர்களுக்கு முன்மாதிரியாக இருக்கும்படி வாழ்ந்தவர். அவர் நமக்குச் செய்த பெரும்பணி தம்மை மட்டுமன்றி தமது குடும்பத்தையே இன விடுதலைக்காக அர்ப்பணித்ததுதான். ஒரு தலைவனின் மிகப்பெரிய பங்களிப்பு யாதெனில் தனது இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்லத்தளபதிகளை உருவாக்குவதுதான். தந்தை செல்வாவின் தளபதியாகிய தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் தன்னுடனேயே இப்போராட்டத்தின் கதை முடியக் கூடாது என்ற தூய சிந்தனையினால் உந்தப்பட்டு இப்பெரும் பணியைப் பூரணமாக ஒப்பேற்றி வைத்தவர். இதனால் பாராளுமன்ற அரசியலில் தம்மைபோன்ற துடிப்புடனும் இலட்சியப்பற்றுடனும் செயற்பட மாவை சேனாதிராசா போன்ற தலைவர்களை உருவாக்கியது மட்டுமன்றி ஆயுதப் போராட்டத்தில் முன்னின்று உழைத்த, உழைக்கும் தலைவர்களையும் உருவாக்கியவரும் இவரே தான். இதனால் தமிழ்த் தேசியப் போராட்டம் ஒரு தொடர்ச்சியான முழுமையான வடிவத்தைப் பெற கால்கோளாக நின்று வழிசமைத்த பெருமகனாகிறார்.

**பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்**
**சிரேஷ்ட துணைத் தலைவர்,**
**இலங்கைத் தமிழரசுக் கட்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தங்கவாத்தும் பாதி அப்பமும்

வெகு காலத்துக்கு முன்பு ஸ்கொட்லாந்தில் ஒரு விவசாயி இருந்தான். அவன் பெயர் வில்ப்ரெட்.

வாத்துக்களை வளர்ப்பது அவனது தொழில். வாத்துக்களையும் முட்டைகளையும் விற்பான்.

ஒருமுறை ஒரு வாத்து அடை காத்த முட்டை ஒன்று உடைந்து வாத்துக்குஞ்சு வெளியே வந்தது. அதைப்பார்த்து வியப்படைந்தான் வில்ப்ரெட். அந்த வாத்து குஞ்சு தகதகக்கும் தங்க நிறத்தில் இருந்தது.

ஆ! இந்த வாத்துக்குஞ்சு அதிசயமான பிராணிதான்! என்று உறுதியாக நம்பினான் அல்ப்ரெட். அதனால் அதை மிக்வும் கவனமாக வளர்த்தான். அவனது நம்பிக்கை வீணாகவில்லை. வாத்துக்குஞ்சு வளர்ந்து பெரிய தங்க வாத்து ஆனது. அது தங்கமுட்டை இட்டது.


அப்போது நண்பன் பீட்டர் அங்கே வந்தான். எல்லாம் உன் அதிர்ஷ்டம் தான் வில்ப்ரெட்! என்ற பீட்டர் சிறப்பான இத்தகைய அரிய பிராணிகளும் பொருட்களும் ராஜாவுக்கு உரிமையானவை. அதனால் நீ இந்த வாத்தை ராஜாவிடம் கொடுத்து விடுவதுதான் நல்லது. அவர் உனக்குப் பரிசுகள் தருவார்! என்றான்.

பீட்டர் சொல்வது சரிதான் என்று வில்ப்ரெட்டுக்கும் தோன்றியது. அவன் வாத்தை எடுத்துக் கொண்டு அரண்மனைக்குப் புறப்பட்டான்.

ஒரு பெரிய காட்டைக் கடந்து தான் அரண்மனைக்குச் செல்ல வேண்டும். படைவீரர்களால் தேடப்பட்டு வரும் ஒரு கொள்ளைக்காரன் அந்தக் காட்டில்தான் இருந்தான்.

பாங்கோ என்று அவன் பெயரைச் சொன்னாலே எல்லோரும் பயந்து நடுங்குவார்கள்.

எனவே வில்ப்ரெட் பயந்து



பயந்து காட்டு வழியே சென்றான். அப்போது அவன் முன்னால் பாய்ந்து வந்து நின்றான் பாங்கோ.

அடேய் உன்னிடம் இருக்கும் பணத்தை எடு! என்று இரட்டைக் குழல் துப்பாக்கியை நீட்டினான். என்னிடம் பணம் இல்லை ஒரேயொரு வாத்துத் தான் இருக்கிறது.

இதை ராஜாவிடம் கொடுப்பதற்காக எடுத்துச் செல்கிறேன். வாத்தை என்னிடம் இருந்து பறித்துக்கொண்டால் ராஜா என்னைத் தண்டிப்பார் என்றான் வில்ப்ரெட்.

அதைக்கேட்ட பாங்கோ, இவன் சொல்வது சரிதான். இந்த வாத்தைப் பிடுங்குவதால் என்ன பயன்? தேவையில்லாமல் ராஜாவின் கோபத்துக்கு ஆளாக வேண்டும்.

அதற்குப் பதிலாக இவனுக்கு ராஜா கொடுக்கிற பரிசுகளைப் பறித்துக்கொள்ளலாம் என்று நினைத்தான்.

பாங்கோ துப்பாக்கியை அகற்றி விட்டுச் சொன்னான்.

உன்னை நான் சும்மா விடுகிறேன். ஆனால் ராஜா தருகிற பரிசில் பாதியை எனக்குத் தர வேண்டும். நிச்சயம் தருகிறேன் என்று வில்ப்ரெட் சம்மதித்தான்.

பின்னர் வாத்துடன் அரண்மனைக்குச் சென்றான். தங்க வாத்தைக் கண்டு ராஜா பெரிதும் வியந்தார்.

யாரங்கே? இந்த அற்புதமான பரிசைக் கொண்டு வந்த இவருக்கு அருமையான விருந்து கொடுங்கள் என்று கட்டளையிட்டார்.

விருந்து முடிந்த பின்னர் வில்ப்ரெட்டுக்கு விலையுயர்ந்த பரிசுகள் தரச்சொன்னார் ராஜா. அப்போது வில்ப்ரெட், ராஜாவே எனக்கு ஒரு அப்பம் மட்டும் போதும். அதுவும் ஒரு பாதியில் மயக்கமருந்து கலந்து செய்த அப்பம் என்றான்.

ராஜா அதைக்கேட்டு ஆச்சரியப்பட்டார். அவன் கேட்டவாறு அப்பத்தைத் தயாரித்துக் கொடுத்தார்கள்.

வில்ப்ரெட் நேராக பாங்கோவிடம் வந்து சொன்னான்.

ராஜா எனக்கு இந்த அப்பம் மட்டும்தான் கொடுத்தார்.

இதில் பாதியை நான் எடுத்துக் கொள்கிறேன்.

வில்ப்ரெட் அப்பத்தின் நல்ல பகுதியை பிட்டுத்தின்றான். மிச்சத்தைப் பாங்கோ விடம் கொடுத்தான்.

சினம் கொண்ட பாங்கோ வில்ப்ரெட்டை சோதனையிட்டான். அவன் எதையும் ஒளித்து வைத்திருக்கவில்லை என்பது உறுதிப்பட்டது.

ஏமாற்றம் அடைந்த பாங்கோ ஏற்கனவே பசியில் இருந்ததால் பாதி அப்பத்தை இதுவாவது கிடைத்ததே என்று நினைத்தபடி தின்று முடித்தான். தலைசுற்றியது.

உடனடியாக மயங்கிக் கீழே விழுந்தான். வில்ப்ரெட் காத்திருந்தது இதற்குத் தானே.

பாங்கோவைத் தூக்கிக் கொண்டு விரைவாக அரண்மனைக்குத் திரும்பிச் சென்றான்.

நடந்ததையெல்லாம் ராஜாவிடம் தெரிவித்தான். படைவீரர்கள் பாங்கோவைப் பிடித்துச் சிறையில் அடைத்தார்கள்.

அறிவாளியான வில்ப்ரெட்டுக்கு ராஜா, மதிப்பு உயர்ந்த பரிசுகளைக் கொடுத்து அனுப்பி வைத்தார்.

கொடுத்து வாழ்... கெடுத்து வாழாதே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாசீர் அரபாத்தின் உடலை தோண்டி எடுத்து பரிசோதனை செய்ய முடிவு

பாலஸ்தீன தலைவர் யாசீர் அரபாத் பொலோனியம் என்ற விஷம் வைத்து கொல்லப்பட்டாரா என்பது குறித்து சுவிஸ் நாட்டு ஆய்வகம் பரிசோதனை செய்யவுள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி இவர் பாரிஸ் புறநகரில் உள்ள மருத்துவமனையில் உயிரிழந்தார். இவருடைய இறப்பில் பாலஸ்தீன தலைவர்கள் சந்தேகப்பட்டனர். கோமா நிலையில் அராபத் இறந்ததால் பிரேத பரிசோதனை ஏதும் செய்யப்படாமல் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இதற்கிடையே அரபாத் இறக்கும்போது மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கையை சுவிட்சர்லாந்து நாட்டு ஆய்வகம் கடந்த மாதம் வெளியிட்டது. அதில் அரபாத் இறக்கும் போது அவரது உடலில் கொடிய விஷமான பொலோனியம் இருந்துள்ளது. ரஷ்ய உளவாளியான அலெக்சாண்டர் லிட்வினென்கோ லண்டன் ஹோட்டலில் தேநீர் கோப்பையில் தடவப்பட்ட பொலோனியம் விஷத்தால் கொல்லப்பட்டார். இதே முறையில்தான் அரபாத் உடலிலும் பொலோனியம் இருந்துள்ளது என தெரிவிக்கப்பட்டது.

அவர் விஷம் வைத்து கொல்லப்பட்டார் என்பதை உறுதியாக நிரூபிக்க வேண்டுமென்றால் அவர் உடலை மீண்டும் தோண்டியெடுத்துத்தான் ஆராய்ச்சி செய்ய வேண்டும். அவரது உடலை பிரேத பரிசோதனை செய்ய வேண்டும் என கோரும் உரிமை அரபாத்தின் மனைவி சுகாவுக்கு மட்டுமே உள்ளது என சுவிட்சர்லாந்து நாட்டின் கதிர்வீச்சு இயற்பியல் துறை தலைவர் பிரான்காய்ஸ் புக்கட் தெரிவித்திருந்தார்.

பாலஸ்தீனத்தின் மேற்கு கரையில் உள்ள ரமலாவில் அடக்கம் செய்யப்பட்ட யாசீர் அரபாத்தின் உடலை மீண்டும் தோண்டியெடுத்து பரிசோதனை செய்ய பாலஸ்தீன நிர்வாகமும் அரபாத்தின் மனைவி சுகாவும் சம்மதம் தெரிவித்துள்ளனர்.


இதையடுத்து சுவிட்சர்லாந்து நாட்டின் லூசானே பல்கலைக்கழக கதிர்வீச்சுத்துறை நிபுணர்கள் விரைவில் ரமலாவுக்கு சென்று அரபாத்தின் உடலை வெளியே எடுத்து பரிசோதிக்கவுள்ளனர். (அ-2)

## 50 இலட்சம் பெறுமதியான போதைப்பொருள் பறிமுதல்

சென்னையில் இருந்து சிங்கப்பூருக்கு கடத்தவிருந்த 50 இலட்சம் ரூபா மதிப்புள்ள போதைப்பொருளை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

சென்னை விமான நிலையத்திலிருந்து சிங்கப்பூருக்கு மசாலா பொருட்கள் என கூறி போதைப்பொருளை கடத்துவதாக சுங்கத்துறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது.

இந்தத் தகவலினை அடுத்து சுங்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். அப்போது 50 இலட்சம் ரூபா மதிப்புள்ள போதைப்பொருள் சிக்கியது. இதை பறிமுதல் செய்த பொலிஸார் கடத்த இருந்தவர்களை கைது செய்தனர். (அ-2)



அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜப்பான் இராணுவ தலைமை தளபதி ஜெனரல் செய்ஜிரு ஐவாஸ்கி, அந்நாட்டு துணை இராணுவ தலைமை தளபதி மார்டின் டிம்ப்ஸேயை பென்டகனில் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

## வடகொரிய ஜனாதிபதி சீனாவுக்கு பயணம்



வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் யூன் பதவியேற்ற பின் முதன்முறையாக சீனாவுக்கு பயணம் மேற்கொள்ளவிருக்கிறார்.

அங்கு அவர் சீன தலைவர்களை சந்தித்து பேசவுள்ளார். இதனை சீனா, வடகொரியா அதிகாரிகள் உறுதி செய்தனர்.

தனது தந்தை மரணம் அடைந்ததை தொடர்ந்து கிம் ஜாங் யூன் கடந்தாண்டு டிசெம்பர் மாதம் பதவியேற்றார்.

அதன்பின் முதன்முறையாக வெளிநாடு சுற்றுப்பயணமாக சீனா செல்ல இருக்கிறார். வடகொரியா சீனாவின் நட்பு நாடு என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## அமெரிக்க உளவு விமானங்கள் ஷாவால் பகுதியில் தாக்குதல்

### 16 தீவிரவாதிகள் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் விடுத்த எச்சரிக்கையை மீறி அமெரிக்க உளவு விமானங்கள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின. இதில் 16 தீவிரவாதிகள் பலியானார்கள்.

அமெரிக்கா கடந்த 18 ஆம் திகதி முதல் உளவு விமானம் மூலம் குண்டுகளை வீசி 20 தீவிரவாதிகளை கொன்றது. கடந்த 19 ஆம் திகதி மட்டும் வடக்கு வசிரிஸ்தானில் 10 தீவிரவாதிகளை கொன்றது.

இதனை அடுத்து பாகிஸ்தான் வெளியுறவுத்துறை சார்பில் அமெரிக்க தூதருக்கு அழைப்பாணை அனுப்பி வரவழைத்து விமானம் மூலம் குண்டு வீச்சு நடத்துவதற்கு கண்டனம் தெரிவித்தது.

மேலும் உளவு விமானம் மூலம் குண்டு வீசுவது சர்வதேச சட்டத்துக்கு விரோதமானது. எங்கள் நாட்டின் இறையாண்மையில் தலையிடும் இந்த செயலை ஏற்க முடியாது என எச்சரிக்கை விடுத்தது.

ஆனால், அமெரிக்கா இதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இந்த எச்சரிக்கை விடுவிக்கப்பட்ட மறுநாளான நேற்று முன்தினம் அமெரிக்க உளவு விமானங்கள் வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் இருக்கும் ஷாவால் பகுதியில் தாக்குதல் நடத்தியது.

அந்த பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த கட்டடம். வாகனங்கள் மீது 6 குண்டுகளை வீசின. இதில் 16 தீவிரவாதிகள் பலியானார்கள். இதில் முக்கிய தீவிரவாதி யாரும் இருக்கிறார்களா? என தெரியவில்லை.

அமெரிக்க அதிகாரிகள் கூறுகையில், இந்த பகுதியில் தீவிரவாதிகளை ஒடுக்குவதில் பாகிஸ்தான் ஈடுபடாததால் விமான குண்டு வீச்சு நீடிக்கிறது. அல்கொய்தா, தலிபான்களை ஒடுக்க இதுவே சிறந்த ஆயுதம் என கூறினர். (அ-2)

உலக தரிசனம்

## வடகொரியாவின் அச்சுறுத்தலை தடுப்பதற்கே ஏவுகணைத்திட்டம்

### அமெரிக்கா தெரிவிப்பு

(வோஷிங்டன்)

வடகொரியாவில் இருந்து வரும் அச்சுறுத்தலுக்காகவே ஜப்பானுடன் இணைந்து ஏவுகணைப் பாதுகாப்பு அமைப்பை விரிவாக்கம் செய்வதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்தில் அமெரிக்காவுடன் ஜப்பான் பல ஆண்டுகளாக இணைந்து பணியாற்றி வருகிறது. ஜப்பானிடம் நிலம் மற்றும் கடலில் இருந்து ஏவுகணைகளைச் செலுத்தக்கூடிய கட்டமைப்பு உள்ளது. இந்நிலையில் அந்நாட்டின் தெற்குப் பகுதியில் எதிரி நாட்டு ஏவுகணைகளைத் துல்லியமாகவும் விரைவாகவும் கண்டறிந்து எச்சரிக்கை செய்யும் ரேடார் கருவியை அமைக்க அமெரிக்கா பேச்சு நடத்தி வருவதாக வால் ஸ்டிரீட் ஜர்னல் பத்திரிகையில் செய்தி வெளிவந்துள்ளது.

ஜப்பானின் வடக்கில் ஏற்கனவே இது போன்ற ரேடார் கருவி அமைக்கப்பட்டுள்ளது. வடகொரியாவிடம் இருந்து வரும் அச்சுறுத்தலைச் சமாளிப்பதற்கும் சீன இராணுவத்தைச் சமாளிக்கவும் புதிய ரேடாரை அமைக்க அமெரிக்கா முயற்சிப்பதாக அப்பத்திரிகைச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க இராணுவத் தளபதி மார்டின் டெம்ப்சேவிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர் பதிலளிக்கையில்,

ஆசியாவில் ஏவுகணைப் பாதுகாப்பு அமைப்பை விரிவாக்கம் செய்வது குறித்து ஜப்பானுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். ரேடார் கருவிகளை விரிவாக்கம் செய்யும் விடயத்தில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. எனினும் பேச்சுவார்த்தையின் முக்கிய அம்சமாக இது விளங்குகிறது. ஏவுகணைப் பாதுகாப்பு அமைப்பு என்பது இரு நாடுகளுக்கும் முக்கியமானதாகும் என்றார். இந்த ஏவுகணைப் பாதுகாப்பு அமைப்பு சீனாவுக்கு எதிரானது அல்ல என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வடகொரியா தயாரித்துள்ள கண்டம் விட்டுக் கண்டம் பாயக்கூடிய ஏவுகணைகள் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகக் கருதப்படுகின்றன.

வடகொரியா இரகசியமாக அணு ஆயுதங்களை உருவாக்கி வருவதும் தென்கொரியாவுக்கும் அந்நாட்டுக்கும் இடையில் பதற்றம் அதிகரித்து வருவதுமே இதற்குக் காரணம். வடகொரியா உருவாக்கி வரும் நீண்ட தூரம் செல்லக்கூடிய ரொக்கெட்களால் அமெரிக்கா வரை சென்று தாக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## மைக்ரோசொப்ட் லோகோ மாறியது

(நியூயோர்க்)

பில்கேட்சின் மைக்ரோசொப்ட் நிறுவனம் நேற்று முன்தினம் புதிய சின்னத்தை நான்கு நிறங்களில் தனித்தனி சதுரங்கள் மைக்ரோசொப்ட் நிறுவன லோகோவாக இருந்தது. இப்பொது சிவப்பு, பச்சை, நீலம், பழுப்பு ஆகிய நான்கு கட்டங்கள் ஒரே அளவுடன் இருப்பது போல எளிமையாக லோகோ வடிவமைக்கப்பட்டுள்ளது.

மைக்ரோசொப்ட் நிறுவனம் தொடங்கப்பட்டு 37 ஆண்டுகள் ஆகின்றன. அப்போது முதல் 5 ஆவதாக வெளியிடப்படும் புதிய லோகோ இது. எனினும் கடந்த 25 ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போதுதான் புதிய லோகோ அறிவிக்கப்பட்டுள்ளது. மைக்ரோசொப்ட் நிறுவனம் தனது சொப்ட்வெயர் கண்டுபிடிப்புக்களில் புதிய அத்தியாயத்துக்குள் நுழைவதை குறிக்கும் வகையிலும் நவீன வர்த்தக உலகில் எளிமையாக அனைவரையும் கவரும் வகையிலும் இருக்கும் என்று மைக்ரோசொப்ட் அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பல் உரிமை நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர முடிவு

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

பாணந்துறை கடற்பரப்பில் மூழ்கிய கப்பலின் உரிமை நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்த 23 ஆம் திகதி கடலில் மூழ்கிய இந்த கப்பலில் இருந்து ஏற்பட்ட எண்ணெய்க் கசிவு தற்போது நின்றுபோயுள்ளதாக சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் எஸ்.ஆர். அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த கப்பலில் இருந்து கசிந்துள்ள எண்ணெய் நாட்டின் கரையோர வலயத்திற்கு வியாபிக்குமாயின் அதனை எதிர்கொள்ள தேவையான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர்நாயகம் அனில்பிரேமரத்ன தெரிவித்தார்.

சைப்ரஸ்க்கு சொந்தமான இந்த கப்பலில் பொருட்கள் விநியோகம் தொடர்பில் ஏற்பட்டிருந்த சர்ச்சை காரணமாக 2007 ஆம் ஆண்டில் வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் கப்பலை கைப்பற்றுமாறு உத்தர விடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# வடக்கில் சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரிப்பு

## யாழ்.பொலிஸ் நிலைய தரவுகளில் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் யுத்த பிரதேசங்களில் சட்டவிரோத மரக்கடத்தல், சட்டவிரோத கசிப்பு உற்பத்தி என்பன அதிகரித்து வருவதாக யாழ்.பொலிஸ் நிலைய வடபகுதி புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிறிகுகனேசன் அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது வழங்கப்பட்ட புள்ளிவிபரத் தரவிலேயே மேற்கண்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இக்கடத்தல்களில் தென்பகுதியை சேர்ந்தவர்களும் ஈடுபடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 23 ஆம் திகதியன்று கொக்குளாய் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் 2 இலட்சத்து 35 ஆயிரம் மில்லிலீற்றர் கோடாவும் முள்ளியவளையில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பும் கொக்குத்தொடுவாயில் 3 இலட்சத்து 50 ஆயிரம் மில்லிலீற்றர் கோடாவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றோடு சம்பந்தப்பட்ட குற்றவாளிகளும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவற்றோடு முல்லைத்தீவு பிரதேசத்தில் கடந்த 20 ஆம் திகதி லொறியில் சட்ட விரோதமாக மரங்களை வெட்டி ஏற்றிச்சென்ற கும்பல் மடக்கிப்பிடிக்கப்பட்டு சாரதி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றை விட யுத்தசூனிய பிரதேசங்களில் கைவிடப்பட்ட வாகனங்களின் உதிரிப்பாகங்கள் தேக்கு மரங்கள் என்பன இராணுவத்தினராலும் தென்பகுதியை சேர்ந்தவர்களாலும் கடத்தப்பட்டு வருகின்றன என அப்பகுதி மக்கள் தெரிவித்திருந்தனர். (அ-4-6)

# பெண்களை தாக்கிய ஐந்து மாணவர்கள்

## பொலிஸார் விசாரணை

(யாழ்ப்பாணம்)

பெண்கள் இருவரை பாடசாலை மாணவர்கள் ஐவர் யாழ்.பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் வைத்து தாக்கியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இவ்விரு பெண்களும் மனிதவுரிமை ஆணைக்குழுவின் சிவில் சமூக ஒருங்கிணைப்பு குழுவில் அங்கத்தவர்களாக உள்ளதோடு சமூக அமைப்பு ஒன்றின் பிரதிநிதிகளாகவும் உள்ளனர்.

தமது வேலையின் நிமிர்த்தம் இரு பெண்களும் சென்று கொண்டிருக்கும் போது அப்பகுதியால் வந்த யாழ்.நகர்ப்பகுதியிலுள்ள பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் அப் பெண்களிடம் சேஷ்டையில் ஈடுபட்டுள்ளதோடு ஒழுங்கற்ற விதத்தில் ஏசியும் உள்ளனர்.

இதனால் கோபமடைந்த பெண்கள் அம் மாணவர்களினை பேசியதோடு அவர்களிற்கு கல்லால் எறிந்துள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த மாணவர்களில் ஒருவர் இப் பெண்களை கடுமை யாக தாக்கியுள்ளார்.

இச்சம்பவத்தினையடுத்து அங்கு கூடிய பொதுமக்கள் தாக்கிய மாணவர்களை பிடிக்க முயன்று உள்ளனர். அதில் ஒருவர் அகப்பட ஏனையோர் தப்பியோடிவிட்டனர்.

அகப்பட்ட அம் மாணவரை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றதோடு ஏனைய மாணவர்களும் அழைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-4)

# இசைப்பேழை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இணுவில் சிவகாமி அம்மன் மீது பாடப்பெற்ற இசைப்பாடல்களின் தொகுப்பான **சிதம்பரவளவாளே போற்றி போற்றி** எனும் இசைப்பேழை வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் சிவகாமி அம்மன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் சமூகவியற்றுறை பேராசிரியருமான பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவரும் சிவபூமி அறக்கட்டளை தலைவருமான கலாநிதி ஆறு. திருமுருகன் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நூலின்வெளியீட்டுரையை ஊர்காவற்றுறை பிரதேச சமூகசேவை உத்தியோகத்தர் வே.சிவராஜா ஆற்றுவார். நிகழ்வில் முதற்பிரதியை பிரபல வர்த்தகரும் தொழிலதிபருமான முருகேசு புஸ்பராசா பெற்றுக் கொள்வார்.

தென்னிந்திய இசையமைப்பாளர் அக்னியின் இசையில் உருவான இவ் இசைப்பேழையில் உள்ள பாடல்களை நம் நாட்டின் முன்னணி பாடகர் எஸ்.ஜி.சாந்தனுடன் இணைந்து உமாசதீஸ், உதயன், மதுரா ஆகியோருடன் தென்னிந்திய பாடகர்கள் ஆன முகேஸ் பிரபாக் ஆகியோரும் பாடியுள்ளனர். (அ-2)

# அநீதியின் கேந்திரமாக மாறுகின்றது இலங்கை

## கிரியெல்ல எம்.பி. குற்றச்சாட்டு

ஆளும் கட்சி அரசியல் வாதிகளின் கறுப்புப்பணம் பங்குச்சந்தையில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கறுப்புப்பணத்தைசட்டரீதியானபணமாகமாற்றிக்கொள்ள பங்குச் சந்தையில் ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்கள் முதலீடு செய்துள்ளனர்.

பங்குச் சந்தை சட்டவிரோத கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏனைய சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கம் பக்கச்சார்பற்ற விசாரணைகள் நடத்தப்படாமைக்கு இதுவே காரணமாகும்.

குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், கொள்ளைக்காரர்கள், கொலையாளிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் ஆளும் கட்சியுடன் தொடர்புபட்டிருந்தால் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுவதில்லை.

அநீதியின் கேந்திர நிலையமாக நாடு மாற்றமடைந்துள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# பஸ் நடத்துநர்களுக்கு பயிற்சிப் பாடசாலை


## போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை

பேருந்து நடத்துநருக்கென பயிற்சிப் பாடசாலைகளை அமைக்கப் போவதாக போக்குவரத்து அமைச்சு கூறியுள்ளது. இந்த பாடசாலை இலங்கை போக்குவரத்து சபையின் கீழ் இயங்குமென போக்குவரத்து அமைச்சர் ரோஹன திஸாநாயக்க தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை போக்குவரத்து சபை பஸ் நடத்துநர்களுக்கு முதலில் பயிற்சியளிக்கப்படும். அதன் பின் தனியார் பஸ் நடத்துநர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இலங்கையில் 525 சாரதி பயிற்சி பாடசாலைகள் உள்ளன. கொழும்பில் மட்டும் 81 பாடசாலைகள் காணப்படுகின்றன. மோட்டார் போக்குவரத்து திணைக்களம் சாரதிப் பயிற்சி பாடசாலைகளை தர நிர்ணயம் செய்கின்றது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களம் ஒரு நாளில் ஆயிரத்து 300 சாரதி அனுமதிப் பத்திரங்களையும் ஒரு மாதத்தில் 40 ஆயிரம் சாரதி அனுமதிப்பத்திரங்களையும் வழங்குகின்றது என்றார். (அ-2)



யாழ்.முகாமையாளர் சம்மேளனம் (JMF) ஏற்பாடு செய்த தொழில்நுட்ப பொருட்களின் பாவனை தொடர்பாக ஆசிய நாடுகளின் போக்கு தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிங்கப்பூர் அப்பாய்க் கம்பனி பிராந்திய முகாமையாளர் தில்லைநாதன் அரவிந்தன் உரை நிகழ்த்துவதையும் தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை உதவி பொது முகாமையாளர், பொறியியலாளர் ரி.பாரதிதாசன் உட்பட கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பங்கள் வந்துவிடுமோ என்ற எண்ணங்கள் துன்பத்தைவிட துயரமானவை.

-ஓர் அறிஞன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## நெஞ்சிடியோடு கூடிய கொழும்புப் பயணம்

எதற்கெடுத்தாலும் ஏங்கித் தவிக்கின்ற பரிதாப நிலையில்தான் தமிழ் மக்களின் வாழ்க்கை இருக்கிறது.

விடிந்தால்–எழுந்தால் ஏக்கம், பயம், பரிதவிப்பு என்ற பதகளிப்பான சூழ்நிலைக்கு எங்களை மிக நீண்ட காலமாக வாட்டிய யுத்தமே முக்கியமான காரணம் என்று கூறலாம்.

இது தவிர தமிழ் இனத்தில் இயல்பாக இருக்கக் கூடிய பொறுப்பற்ற தன்மைகள், எதற்கு எடுத்தாலும் விமர்சனம் செய்யும் அநாகரியத் தனங்கள், கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள், ஒழுங்கு படுத்தப்படாத நிர்வாக கட்டமைப்புகள், சண்டித்தனக் கலாசாரங்கள் என்ற ஒட்டுமொத்தப் பலவீனங்களும் சேர்ந்து எங்கள் ஏக்கத்திற்கும் பயத்திற்கும் பதற்றங்களுக்கும் காரணமாகின.

இதில் யாழ்ப்பாணம்–கொழும்பு, கொழும்பு–யாழ்ப்பாணம் பயணத்தை நினைக்கும் போது நெஞ்செரிவுதான் ஏற்படுகின்றது.

இரவுப்பயணம் பயணிகள் உறங்கும் வேளை அந்நேரத்தில் சாரதியும் சற்று உறங்க நினைத்தால் நிலைமை மிக மோசமாகும்.

இந்த நிலைமை இப்போது கொழும்பு–யாழ்ப்பாணம் என்ற பயண சேவையில் இடையிடையே ஏற்படுகின்றது.

எந்நேரமும் எதுவும் ஏற்படலாம் என்ற ஏக்கம் தீரவேண்டுமாயின் ஒரு பயணத்தின் போது இரண்டு சாரதிகள், இரண்டு நடத்துனர்கள் பணியில் ஈடுபட வேண்டும். ஒருவர்மாறி ஒருவர் உறங்குவதற்கான சந்தர்ப்பங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

இதைவிடுத்து ஒரே சாரதி இரவுப் பயணத்தில் ஈடுபடுவாராயின்–நடத்துனர் நன்றாக தூங்குவாராயின் பயணிகள் மீளாதுயில் கொள்ள வேண்டியிருக்கும்.

எனவே கொழும்பு–யாழ்ப்பாண பஸ் சேவையை நடத்துகின்ற அனைவரும் இது விடயத்தில் கவனம் செலுத்துவது அவசியம்.

இதற்கு மேலாக பெறுமதியான பொருட்கள் அடங்கிய பொதிகளை பஸ்ஸின் பின்பெட்டியில் வைத்துவிட்டு, அது தொடர்பில் பயணிகள் அடையும் ஏக்கம் சொல்லி மாளா. சில வேளை பஸ்ஸில் உறங்கும் போது, என்ர பொதி எங்கே? என்று பிசத்தி திடுக்கிட்டு எழுபவர்களையும் காண முடியும். இத்தகைய ஏக்கங்களை தவிர்க்க பயணச் சீட்டில் எத்தனை பொதிகள் எனக் குறிப்பிடுவது, அவற்றுக்கு இலக்கங்கள் அடங்கிய ஸ்ரிக்கர்களை ஒட்டுவது, அதே இலக்கத்தை பயணச்சீட்டிலும் குறிப்பது என்ற நடைமுறையை பின்பற்றினால் பொதிகள் காணாமல் போவதை தவிர்க்கவும் உரிய பயணிகள் ஏக்கமற்று உறங்கவும் முடியும்.

இவைபற்றி கொழும்பு–யாழ்ப்பாண சேவையை நடத்துபவர்கள் சிந்தித்து செயலாற்ற வேண்டும். நடக்குமா?

## (உ/த) மாணவர்களுக்கான வதிவிடப் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியின் ஏற்பாட்டில் வடமாகாண கல்வியமைச்சின் வழிகாட்டலில் வடமாகாண கல்வித் திணைக்களம் நடத்தும் இம்மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட (உ/த) மாணவர்களுக்கான தலைமைத்துவ திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான வதிவிடப்பயிற்சிநெறி எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள முதலாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் ஆர். விஜயலக்சுமி கலந்து கொள்வார்.

இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் துணைவேந்தர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை கலந்துகொள்வார்.

இதில் மாணவர்களுக்கான தலைமைத்துவ திறன்பயிற்சி, மனிதநேயப் பண்புகள், தொழில்சார் வழிகாட்டல், ஆத்மீகப் பண்புகள் பற்றிய விரிவுரைகள் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் மற்றும் யாழ்.கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்களால் மேற்கொள்ளப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறிக்கு வடமாகாணத்தில் உள்ள மூவினத்தையும் சேர்ந்த 400 மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## மென்பந்து துடுப்பாட்ட இறுதிப்போட்டி இன்று

இணுவில் கலைஒளி மன்றம் நடத்தும் கணேஸ்வரியம் வெற்றிக்கிண்ணம் மென்பந்துத் துடுப்பாட்ட இறுதிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணிக்கு யா/இணுவில் மத்திய கல்லூரி மைதானத்தில் நா.கிருபாகரன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிகத் துறை முகாமைத்துவப்பீடப் பேராசிரியர் க.தேவராஜா கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்புவிருந்தினராக யா/ இணுவில் மத்திய கல்லூரி அதிபர் ஆ. சதானந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

இப் போட்டியின்போது ஏபி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து காமாட்சி விளையாட்டுக்கழகமும் கலையொளி சிரேஷ்ட அணியை எதிர்த்து கலைஒளி கனிஷ்ட அணியும் மோதவுள்ளன. (அ-2)

## பாதசாரிக்கடவை அமைக்கக் கோரிக்கை


(முல்லைத்தீவு)

களப்பாடு அ.த.க.பாடசாலையின் முன்வீதியில் மஞ்சள் கடவை அமைக்கப்படாமை யினால் மாணவர்கள் விபத்துக்களை 'எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வீதியில் உள்ள சிலாவத்தை தமிழ் வித்தியாலயம், முல்லை. றோ.க.த.க. பாடசாலை, உடுப்புக்குளம் அ.த.க.பாடசாலை, அலம்பில் றோ.க.வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு முன்னால் மஞ்சள் கடவைகள் அமைக்கப்பட்ட போதும் மேற்குறித்த கள்ளப்பாடு அ.த.க. பாடசாலைக்கு முன்னால் மஞ்சள் கடவை அமைக்கப்படவில்லை. எனவே, உரியவர்கள் இதனைக் கருத்திற் கொண்டு மஞ்சள் கடவையை அமைத்து விபத்துக்களை குறைக்க ஆவன செய் யுமாறு பயணிகளும் மாணவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-3-267)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### கண்டோர்க்குங் குறையுண்டோ



உண்டோதா னுனைப்போல ஒருவ ரிந்த
உலகத்தில் உறுதிதந்தோ ருணர்ந்து பார்க்கில்
எண்டோள னாவாய் நீ என்னை யுன்னை
எவர்பிரித்துச் சொல்லவல்லார் எந்தாய்! எந்தாய்!
வண்டோதை குறையாத வளஞ்சேர் நல்லைக்
குருமணியே! மௌனத்தின் வைப்பே! யுன்னைக்
கண்டோர்க்குங் குறையுண்டோ கலந்து கொண்டேன்
கள்ளுண்ட வண்டுபோ லாயி னேனே

## ஆண்டவரே! நாங்கள் யாரிடம் போவோம்; உமது வார்த்தைகள்தான் எம்மை வாழவைக்கும்

இயேசுவின் சீடரில் பலரும் இயேசுவின் போதனைகள் சிலவற்றைப் பற்றி, குறிப்பாக தமது உடலை உணவாகத் தருவது பற்றி இயேசு குறிப்பிட்டதை ஏற்றுக்கொள்வது மிகக் கடினம் என்று பேசிக்கொண்டது ஒரு வியப்பான தகவல்தான். தமது போதனையை இயேசு இன்னும் அழுத்தத்துடன் எடுத்துரைத்தபோது, அந்தப் போதனையை ஏற்றுக்கொள்ளாமல் அவர்கள் பிரிந்து சென்றனர் என்பதை அன்றே இயேசுவின் சீடருள் பலர் அவரைவிட்டு விலகினர் என்பதை இன்றைய நற்செய்தி வாசகம் பதிவு செய்திருக்கிறது.

### பரமபிதா காட்டிய பாதை

நற்கருணை என்னும் அருட்சாதனத்தை நம்பாமல், ஏற்றுக்கொள்ளாமல் அதன் காரணமாகத் திருச்சபையை விட்டுப் பிரிந்து செல்லும் ஏராளமான கத்தோலிக்கர்களின் முதல் முன்னோடிகள் இவர்களே என்றும் கூறிவிடலாம். இவர்களின் பிரிவு குறித்து இயேசு கவலைப்படவில்லை. தமது போதனையை மாற்றிக் கொள்ளவுமில்லை. நீங்களும் போய்விட நினைக்கிறீர்களா? இயேசு தன் சீடர்களிடம் கேட்ட இந்தக் கேள்வியை இன்று நம்மை நோக்கிக் கேட்பதாக எடுத்துக்கொண்டால் தற்காலத்தில் பல்வேறு காரணங்களுக்காக இறைவனை விட்டு, ஆலய வழிபாடுகளை விட்டு, இறைமதிப்பீடுகளை விட்டு எம்முள்ளிருந்து பிரிந்துபோகும் மனிதரின் எண்ணிக்கை பெருகி வருகிறதை நாம் காணலாம்.

இறைபக்தி இல்லாமல், செபம் இல்லாமல், இறைவழிபாட்டில் பங்கேற்கும் இளையோரின் எண்ணிக்கை குறைவதைக் காணலாம். உலக நாட்டங்களில் ஈடுபட்டு வாழும் மனிதர் அனைவரும் இயேசுவை விட்டுப் பிரிந்து செல்கின்றனர் என்றுதான் இன்று கூறத் தோன்றுகின்றது. எனவே எம்மைப் பார்த்து இயேசு கேட்கிறார்: நீங்களும் போய்விட நினைக்கிறீர்களா? எனவே, நாம் ஆண்டவரையே என்றும் பற்றிக் கொள்வோம். நானும் என் வீட்டாருமே ஆண்டவரையே என்றும் வழிபடுவோம் என்று யோசுவா துணிவுடன் அறிக்கையிட்டது போல நாமும் ஆண்டவரைப் பற்றிக்கொண்டு விடை பகிர்வோம்.

நாம் வாழும் இக்காலத்தில் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் வாழ்வது எளிதான காரியமல்ல. இது கிறிஸ்துவின் காலத்திலும் எளிதாக இருக்கவில்லை. கிறிஸ்துவின் போதனைகளைப் பின்பற்றும் பொழுது எதிர்ப்படும் இடையூறுகளிலிருந்து நீந்திச் செல்லுமாறு இயேசு தம்மைப் பின்செல்வோரைக் கேட்கின்றார்.

இயேசு தன் தசையை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வடையமாட்டீர்கள் என்று உறுதியாக உரைத்ததைக்கேட்டு அவரைப் பின்சென்ற பலர் அவரை விட்டு விலகிச் சென்றதை படம் பிடித்துக் காட்டுகின்றது இன்றைய நற்செய்தி வாசகம்.

எனினும் இயேசு போதனைகளைக் கைவிடவில்லை.உண்மையில் இயேசு தமது பன்னிரெண்டு திருத்தூதர்கள் பக்கம் திரும்பி நீங்களும் போய்விட நினைக்கின்றீர்களா என்று கேட்டார். பதிலை எதிர்பார்த்த இந்தக் கேள்வி இயேசுவின் பன்னிரு அப்போஸ்தலர்களுக்கு மட்டுமல்ல ஒவ்வொரு காலத்தின் விசுவாசிகளுக்கும் முன் வைக்கப்படுகிறது.



இன்றும்புகூட கிறிஸ்தவ விசுவாசத்தின் புரிந்துகொள்ள முடியாத உண்மைகளால் பலர் துர்மாதிரிகைஅடைகிறார்கள். இயேசுவின் போதனை கடினமாகத் தோன்றுகின்றது. செயற்படுத்துவதற்கு அது மிகவும் கடினமாக இருக்கின்றது என்பது, கிறிஸ்துவைக் கைவிடுபவர்களும் அவரது போதனையைப் புறக்கணிக்கிறவர்களும் சொல்வது. இவர்கள் காலத்தின் அமைப்புகளுக்கு ஏற்ப வார்த்தையை வடிவமைத்து அவற்றின் அர்த்தத்தையும் மதிப்பீட்டையும் சிதைப்பவர்கள். இயேசு தம்மைப் பின்செல்வோரின் மேலோட்டமான வாழ்க்கையில் திருப்தி கொள்ளவில்லை. மாறாக அவர்கள் தங்கள் வாழ்க்கை முழுவதும் அவரின் சிந்தனைகளிலும் அவரது திட்டத்திலும் பங்கு கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார். ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன என்று இயேசுவிடம் அறிக்கையிட்ட தூய பேதுருவின் பதிலையும் கருத்திற்கொள்ள வேண்டும். நமது மனிதப் பலவீனங்களைப்புரிந்து கொள்ளும் அதேவேளை தூய ஆவியின் வல்லமையில் நம்பிக்கை வைத்த பேதுரு போல நாமும் இயேசுவிடம் செல்வோம். ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம். கடினமானதாக இருந்தாலும் உமது வார்த்தைகள்தான் எங்களைவாழவைக்கும் என்று கூறி அவரிடமே அடிபணிவோம்.

ம.பிரான்சீஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி ஞான வைரவர் வி.க. கிரிக்கெட் போட்டியில்
# கோண்டாவில் கலைவாணி அணி சம்பியன்

(வேலணை)

அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழகத்தின் 13 ஆவது நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியில் நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் சம்பியன் பட்டத்தை கோண்டாவில் கலைவாணி வென்றுள்ளது.

6 பேர் 5 ஓவர்களாக நடத்தப்பட்ட இச்சுற்றுப்போட்டியில் இறுதிப் போட்டி மாத்திரம் 9 பேர் 8 ஓவர்களாக நடத்தப்பட்டது. 21 கழகங்கள் பங்குபற்றிய இச்சுற்றுப் போட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஏழாலை ஸ்ரீமுருகன் அணியும் கோண்டாவில் கலைவாணி அணியும் மோதின.



நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீமுருகன் அணி அதிரடியாக ஆடியபோதும் சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களை இழந்து வந்தது. இறுதியில் 5 விக்கெட்டுக்களை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் புனிதராஜ் 21 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

64 ஓட்டத்தை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய கலைவாணி அணி ஆரம்பத்தில் ஓட்டங்களை ஆறுதலாக பெற்று வந்தனர்.

இறுதியில் 2 ஓவர்களில் 24 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் களத் தில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த சுஜீபராஜ் அதிரடியாக தொடர்ந்து மூன்று ஆறு ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.

இறுதியில் 7.3 ஓவர்களில் 2 விக்கெட்டை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்று சம்பியனாக கோண்டாவில் கலைவாணி அணியினர் தெரிவு செய்யப்பட்டனர்.

துடுப்பாட்டத்தில் சுஜீபராஜ் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டத்தையும் முகுந்தன் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டத்தையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜீவிதன் ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்.

இறுதிப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக கலைவாணி அணியின் சுஜீபராஜ் அவர்களும் தொடரின் சிறப்பாட்டக்காரராக ஸ்ரீ முருகன் அணியின் புனிதராஜ் அவர்களும் தெரிவானார்கள்.

# மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் உதைபந்தாட்ட இறுதிப் போட்டி இன்று

வடமராட்சியில் பல்லாயிரக்கணக்கான உதைபந்தாட்ட ரசிகர்கள் மத்தியில் இராணுவம், பொலிஸ் பாதுகாப்பு வழங்க யாழ். மாவட்டத்தின் முன்னணி நட்சத்திர பலம் வாய்ந்த அணிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு இறுதிப் போட்டியில் மோதவுள்ளன.

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் உதைபந்தாட்ட இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று இரவு கழக மைதானத்தில் தலைவர் எஸ்.செல்வதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீநிவாசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சிவசிறி, 521 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் டிக்கிரி திசாநாயக்க, வடமராட்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் யசிந்த கமகே, பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் இன் தலைவர் வி.எம்.வேதாபரணம் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் இன் செயலாளர் ரி.வரதராஜன், நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.காங்கரா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இவ் இறுதிப் போட்டியில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் அணி மோதவுள்ளது. மூன்றாம் இடத்துக்கான போட்டியில் இளவாலை யங்கென்றிஸ் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதவுள்ளது.(3-24)





# ஆவரங்கால் மத்திய வி.க. கரப்பந்தாட்ட போட்டியில்
# ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க. சம்பியன்

(வேலணை)

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியில் நடத்திய கரப்பந்தாட்டப் போட்டியின் சம்பியன் பட்டத்தை ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் வென்றுள்ளது.





கடந்த புதன்கிழமை மின்னொளியில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் மற்றும் உடுப்பிட்டி நவஜீவன் அணியும் மோதிக் கொண்டன.

ஆவரங்கால் இந்து இளைஞர் அணியின் சம்பியன் வேட்டைக்கு உடுப்பிட்டி நவஜீவன் அணி முற்றுப்புள்ளி வைக்குமா அல்லது சம்பியன் வேட்டை தொடருமா என்ற ரசிகர்களின் எதிர்ப்பார்ப்புக்கு மத்தியில் ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இப்போட்டியின் முதல் சுற்று ஆரம்பமானது.

தமது துடிப்பான ஆட்டத்தின் மூலம் முதல் சுற்றை இந்து இளைஞர் அணி 25:20 என்ற புள்ளியடிப்படையில் கைப்பற்றியது.

இரண்டாம் சுற்றில் தமது அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய நவஜீவன் அணி 25:18 என்ற கணக்கில் கைப்பற்ற போட்டி விறுவிறுப்பான நிலையை அடைந்தது.

ரசிகர்களின் ஆரவாரம் அதிகரிக்க மூன்றாம் சுற்று ஆரம்பமானது.

மூன்றாம் சுற்றில் பதிலடி கொடுத்து ஆடிய இந்து இளைஞர் அணி 25:17 என்ற புள்ளியடிப்படையில் கைப்பற்றியது. இரு அணிகளுக்கும் முக்கியமான நான்காம் சுற்றில் தொடர்ந்து தமது ஆதிக்கத்தை வெளிப்படுத்திய இந்து இளைஞர் அணி 25:21 என்ற புள்ளியடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் மாவட்ட ரீதியில் நடத்திய கரப்பந்தாட்டப் போட்டியின் சம்பியன் பட்டத்தை ஆவரங்கால் இந்து இளைஞர்விளையாட்டுக்கழகம் வென்றுள்ளது.

இதன்மூலம் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியின் சம்பியன் வேட்டை தொடர்ந்து செல்கின்றது. இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக இந்து இளைஞர் அணியின் ஜனகன் தெரிவானார்.

ஆவரங்கால் இந்து இளைஞர் அணிக்கான வெற்றிக் கிண்ணத்தை வடமாகாண விளையாட்டுப் பணிப்பாளர் சி. அண்ணாத்துரை வழங்கி கௌரவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலி.தெற்கு பிரதேச சபை தாக்குதல் சம்பவம் தொடர்பில் எவரும் கைதுசெய்யப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை மீதான கழிவு ஒயில் தாக்குதல் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றோம் எனவும் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீ குகணேசன் தெரிவித்துள்ளார்.

அவரது அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம் மீது கடந்த 22 ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 2.00 மணியளவில் சுமார் 15 இற்கும் மேற்பட்ட ஆயுதம் தாங்கிய இனம் தெரியாத நபர்கள் கழிவு ஒயில் தாக்குதல் மேற்கொண்டனர்.

இதன்போது அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த இரண்டு காவலாளிகள் மீதும் ஆயுதம் தாங்கிய இனம் தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியதோடு அவர்கள் இருவரையும் கை, கால், கண் என்பன வற்றைக்கட்டி அருகிலிருந்த பற்றைக்குள் வீசியுள்ளனர்.

இது தொடர்பாக சுன்னாகப் பொலிஸ் நிலையத்தில் பிரதேச சபைத் தலைவரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளீர்கள் எனக் கேட்ட போதே சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ-6)

# சுணைக்கேடு நாடகம்

ஜேர்மன் கலாசார மையமான கோத்தேயின் அனுசரணையுடன் செயல்திறன் அரங்க இயக்கம் தயாரித்து வழங்கும் "சுணைக் கேடு" மொழிபெயர்ப்பு நாடகம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. (ந-9)

# சர்வதேச உறவுகளைப் பேண...

சமரசிங்க, எதிர்க் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோருடன் சந்திப்பு நடத்தினார்.

இதற்கு மேலதிகமாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு நேரடி விஜயம் செய்து கள நிலைவரங்களை பார்வையிட்டார்.

இதனையடுத்து இலங்கை ஊடகவியலாளர்களுடனான சந்திப்பை கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவரின் வாசஸ்தலத்தில் நேற்று சனிக்கிழமை மேற்கொண்டார்.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அகாஷி,

தற்போது வட மாகாணத்தில் பாரிய மாற்றங்களை காணமுடிகின்றது. கடந்த விஜயங்களை விட இந்தத் தடவை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட போது குறித்த மாற்றங்களை அவதானிக்கு முடிந்தது.

இந்த அபிவிருத்தித் திட்டங்களை வட மாகாணத்தில் மேற்கொண்டமைக்காக இலங்கை அரசு மற்றும் மக்களுக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கான தேசிய செயற்றிட்டம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கே இம்முறை இலங்கைக்கு விஜயம் செய்தேன்.

நான் சந்திப்பு மேற்கொண்ட அனைவருடனும் இந்தத் திட்டம் தொடர்பில் கலந்துரையாடினேன். அத்துடன் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கான தேசிய செயற்றிட்டத்தை வரவேற்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நேற்றுக் காலை இடம்பெற்ற சந்திப்பில் தெரிவித்தேன்.

அத்துடன் குறித்த செயற்றிட்டத்தின் அமுல்படுத்தல் தொடர்பில் ஜப்பான் கண்காணிப்பினை மேற்கொள்ளும். அத்துடன் இந்த செயற்றிட்டத்தின் அமுல்படுத்தலின் ஊடாக சர்வதேச சமூகம் எதிர்பார்க்கும் காத்திரமான விளைவினை காண்பிக்க முடியும்.

இலங்கையில் அபிவிருத்திகளை மேற்கொள்கின்றதே தவிர நாட்டை கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கில் ஒரு போதும் ஜப்பான் செயற்படவில்லை. யுத்தத்தினால் உள்நாட்டில் இடம்பெயர்ந்த 98 சதவீதமான மக்கள் இதுவரை மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

ஏனையோர் ஆகஸ்ட் மாத இறுதிக்குள் மீள்குடியேற்றப்படுவர் என இலங்கை அரசினால் உறுதிமொழி வழங்கப்பட்டாலும் மிக விரைவில் மீள்குடியேற்றப்படுவார் என நம்புகின்றோம். அத்துடன் முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வு செயற்பாடு மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும் என்றார். (எ-11)

## துயர் பகிர்கின்றோம்

### இ.சங்கர் (செங்காரபிள்ளை)
(உரிமையாளர், பாரதி பதிப்பகம்




அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீமுருகன் கொமினிகேசன்.
உரிமையாளர், ஊழியர்கள்.
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-835)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகளில்

### அமரர் சிவபரன் தர்ஷிகா



தோற்றம்
19 08 1988
மறைவு
19 08 2010

தாங்கள் இவ்வுலகை விட்டுச் சென்று இரண்டு ஆண்டுகள் கடந்தும் கூட தங்களின் நினைவுகள் எங்கள் மனதைவிட்டு அகலவில்லை. தங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

வீரபத்திரர் கோவிலடி,
மல்லாகம்.

அன்புடன்
கணவர் சி.சிவபரனும்.
மகன் சி.கிருத்திகனும்
(சி-836)

## கலை பண்பாட்டு விழா
## புதுவை கலை பண்பாட்டுப் பேரவை
## வலிகாமம் கிழக்கு – கோப்பாய்

**கோப்பாய் கலைஞர்களை பதிவு செய்தலும் கீதத்தினை உருவாக்குதலும்.**

மேற்படி விழாவில் பிரதேச ரீதியான கலைஞர்களை இனங்காணும் முகமாக பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த கலைஞர்களை 10.09.2012 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் கிராம அலுவலரிடம் பெயர் விபரங்களை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


| | |
|---|---|
| புத்தூர் மேற்கு | : J/273 |
| புத்தூர் கிழக்கு | : J/278 |
| புத்தூர் வடக்கு | : J/274 |
| ஆவரங்கால் கிழக்கு | : J/276 |
| ஆவரங்கால் மேற்கு | : J/277 |
| வாதரவத்தை | : J/280 |
| நவற்கிரி | : J/275 |

மேற்படி மன்றத்திற்கான கீதம் பிரகடனப்படுத்தப்படவுள்ளதால் ஆர்வலர்களை எமது கிராமங்களை பிரதிபலிக்கும் வகையில் கீதத்தினை உருவாக்கி 10.09.2012 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கும் பட்சத்தில் பொருத்தமான கீதம் ஒன்று தெரிவு செய்யப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

செயலாளர் : புதுவை கலை பண்பாட்டுப் பேரவை
புத்தூர் மேற்கு, வலிகிழக்கு–கோப்பாய்
(288)

## மரண அறிவித்தல்

### பரஞ்சோதி சரவணமுத்து (C.T.B. சாரதி)



திருநெல்வேலி கிழக்கு கெனடி லேனைச் சேர்ந்த பரஞ்சோதி சரவணமுத்து (வெள்ளை அண்ணை, ரமேஸ் பேக்கரி முன்னாள் உரிமையாளர்) காலமானார். அன்னார் அமரர்களான பரஞ்சோதி அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் மல்லிகா பூசணிதேவியின் அன்புக் கணவரும், தர்மிளா (ஜேர்மன்), குகனேசன் (வீதி அபிவிருத்தி அதிகார சபை யாழ்.) பரமேசன் (பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை), அகிலா (அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிறு பி.ப. 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரிகைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: குடும்பத்தினர்.
கெனடி வீதி, திருநெல்வேலி கிழக்கு


## மனோதத்துவ வைத்தியம்
## (General Psychotheraphy)
## பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P. ஆறுமுகம் T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

28.08.2012 முதல் 05.09.2012 வரை 9 நாட்கள்மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/–

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுக மாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்

(பஸ்நிலையத்துக்கு அருகில்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
(சி-832)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீது தாக்கு...

இந்த ஏவுகணைகள், ஆயிரம் முதல் 2 ஆயிரம் கிலோ எடை கொண்ட அணு ஆயுதங்களை சுமந்து கொண்டு செல்லும் ஆற்றல் பெற்றவை. மேலும் ஆயிரம் முதல் 8 ஆயிரம் கிலோ மீற்றர் சென்று துல்லியமாக நிலைகளை சென்று தாக்கக்கூடிய வகையில் அக்னி 5 ஏவுகணை வடிவமைக்கப்பட்டுள்ளது.

அக்னி 5 ஏவுகணை மூலம் இலங்கை உள்ளிட்ட தெற்காசியாவில் உள்ள எந்தவொரு நாட்டில் உள்ள ஒரு இலக்கையும் தாக்க முடியும். குறிப்பாக ஈரான், பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், மியன்மார் வழியாக சீனாவின் விநியோக பாதையை தடுக்க, அமெரிக்காவும் இந்தியாவும் இரகசியமாக இணைந்து திட்டமிட்டுள்ளது.

பாகிஸ்தான் மற்றும் சீனாவிடம் இருந்து ஏவுகணைத் தாக்குதல் நடைபெற்றால் அதைத் தடுப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை இந்தியா செய்து வருகிறது என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இதனை மறுத்துள்ள இந்திய பாதுகாப்பு அதிகாரிகள், இந்தியாவும், இலங்கையும் நட்பு நாடுகள். இரு நாடுகளுக்கும் இடையில் சின்ன மன வருத்தம் கூட இல்லை. இனி வரவும் வாய்ப்பில்லை. இது போன்ற செய்திகள் யூகத்தின் அடிப்படையில் வெளியிடுவது தேவையில்லாத பதற்றத்தை ஏற்படுத்தும் என்று கூறியுள்ளனர். (எ-11)

## 'ஜெ'...

மத்தாயி, வெலிங்டன் இராணுவப் பயிற்சி மையத்தில் இலங்கை இராணுவ அதிகாரிகள் இரண்டு பேருக்கு பயிற்சி அளிக்கக்கூடாது என்ற ஜெயலலிதாவின் கோரிக்கை தொடர்பாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சகம் பரிசீலிக்கும் என்றார். (எ-11)

## ஜனாதிபதி- அகாஷி...

கடந்த 21-ம் திகதி இலங்கை வந்த அகாஷி, வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் பல சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.(எ-11)

## வெள்ளை வான்...

தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தை மனித உரிமை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

வெள்ளைவான் கடத்தல் தொடர்பில் துரித கதியில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என பொலிஸ் மாஅதிபர் என்.கே.இலங்ககோனிடம், மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

வெள்ளைவான் கடத்தல் மற்றும் காணாமல்போதல் சம்பவங்கள் தொடர்பிலான பல முறைப்பாடுகள் நிலுவையில் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## பரு....

முற்பட்ட வேளை இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அல்வாய் வடக்கைச் சேர்ந்த வே.சீவரத்தினம் (வயது 75) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் சாரதி உட்பட 18 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.(எ-3,10)


## Service station
## உடன் விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் சந்திக்கு அண்மையில் பலாலி வீதியில்
நல்ல நிலையில் இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கும்
**பார ஊர்திகள் சுத்திகரிப்பு நிலையம்**
(சேவிஸ் ஸ்ரேசன்)
உடன் விற்பனைக்கு உண்டு
4.5 பரப்பளவில்
விலை 99 Lakhs
(விலை குறைக்கப்பட்டுள்ளது)
உடனடித் தொடர்புகளுக்கு:
**T.P : 0770 780 393**
**0777 696 443**
**E_Mail : citystarkb@gmail.com**

## விற்பனைக்கு

3 கியூப் ரிப்பர் லேலன் (மஞ்சள்)
No.LD 5758 (கொமட் மொடல்)
தொடர்பு:
0772812459
மகா புரெக்ஸ் A35 வேலை செய்கிறது
(C-834)

## A Music Workshop with Dr.TanyaEkanayaka

A moment of healing for us all, through music...

**Date:** 31st of August
**Venue:** Chundikuli Girls' College Hall, Chundikuli, Jaffna
**Time:** 4 PM – 6 PM
*Only through registration , phone Chundikuli Girls College at 021 2222338 or Renuja at 0773063653 for registration*

SJC 87 initiative is organising a workshop for music students and teachers through Chundikuli Girls' College and Uduvil Girls' College.

**About Dr. Tanya Ekanayaka**



Dr.Tanya Ekanayaka

One of Sri Lanka's première concert pianists, a composer, musicologist and linguist has given solo recitals in prestigious concert venues in Europe and the United States. Currently based in the UK, she is a member of staff of Edinburgh University. Tanya is the first Sri Lankan pianist to be invited to perform in the 'Pianists of the World' series at London's St Martin-in-the-Fields founded by the legendary Dame Myra Hess. Her programme concluded with the world première of her composition 'Adahas: of Wings of Roots' which is the first Sri Lankan composition to be performed at this venue. 2012 has seen Tanya debut in the US with a solo recital at The John F. Kennedy Centre for the Performing Arts in Washington DC and a performance at the Asia Society Concert Hall in New York. Her Kennedy Centre programme incorporated the world première of her compositions, 'Labyrinth;Vannam Lent' and 'Dhaivaya: Alter(ing) Hue' which are the first Sri Lankan compositions for the piano to be performed at this venue. Among forthcoming highlights for 2012 are solo recitals in Hong Kong and at London's St. Martin-in-the-Fields.

Visit us at **www.sjc87initiative.org**
(285)

## பார ஊர்திகள் தேவை

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு, புத்தளம், அனுராதபுரம், கெப்பரிகொலாவ, பதவியா, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு போன்ற இடங்களுக்கு சீமெந்து ஏற்றிச் செல்ல பார ஊர்திகள் தேவை. ஏற்றிச் செல்லும் இடங்களிற்கேற்ப கூலி வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
**Eswarabagawaan & Company,**
**No. 91, Stanly Road, Jaffna.**
**T.P : 0774787690/ 0773948917/ 021-2227603**
(283)

Jaffna College Institute of Technology

## Vacancies

Instructor/lecturer (Civil Engineering)

<u>Qualification:</u>

B.Sc .Eng or E.C.E or NDT or or any other equivalent qualification.
Candidates should be able to lecture in English Medium

*Apply on or before 3rd Sep 2012 with full Bio-Data to:*

Director
Jaffna College Institute of Technology, Vaddukoddai.
*Short listed candidates will be called for an interview.*
TP:021-321 3139 021-222 8275 Email:jcit@sltnet.lk
(C-827)

## பழைய பட்டுப்புடவை பணமாகிறது!
## ஸ்ரீ காஞ்சிபுரம் பட்டு சென்ரர்
# யாழ்ப்பாணம்

வாகன தரிப்பிட வசதியும் உண்டு

தியாகி அறக்கொடை நிறுவன வளாகம் T.C.T வணிக வளாகம்.
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே:-0752145355

8 தினங்கள் மட்டுமே!

**26.08.2012 முதல் 02.09.2012 வரை**



பழைய (கிழிந்த) பட்டுப்புடவைகள், பட்டு வேஷ்டிகள், பட்டுப்பாவாடைகள், பழைய கிழிந்த கூறைப் புடவைகளும், எந்த நிலையில் இருந்தாலும் காஞ்சிபுரம் மில் விலைக்கே வாங்கிக்கொண்டு உடனே பணம் தரப்படும்.

பழைய டிஸ்யூ புடவைகள் ரூபா 5000/-க்கு மேல் ரூபா 20000/- வரை வழங்கப்படும்

பழைய காலத்து கல்வைத்த நகைகள், லால்குடி, ஜடபில்லை, பவளம், பவள மாலைகள் நல்ல விலைக்கு வாங்கப்படும்

குறிப்பு :- எங்களுக்கு வேறு கிளைகள் கிடையாது

இந்த விளம்பரத்தைக் கொண்டு வந்து பட்டுப் புடவை கொடுத்தால் வெள்ளிக் கொலுசு (30Tch) ஒன்று இலவசம்

வேலை நேரம் காலை 9.30 மணிமுதல் இரவு 6.30 மணிவரை - ஞாயிற்றுக்கிழமை கடை உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.